
www.padippakam.com P. RAYAKARAN

# தேசியஇனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்

வ. ஐ. ச. ஜெயபாலன்





P'RAYA
87 RUE DE COLOMBES
...600 ASNIERES SUR -
...ANCE

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தேசியஇனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்

வ. ஐ. ச. ஜெயபாலன்



P'RAYA
87 ... COLOMBES
92000 ... SUR -
- SEINE, FRANCE



படிப்பகம்

www.padippakam.com

அலை வெளியீடு
மார்கழி 1983
விலை: ரூபா 5-00

**The National Question and the Muslims**

(A Socio-Political analysis in Tamil)

*By V. I. S. Jayapalan*

*Published by Alai Veliyeedu*
48, Self-Help Housing Scheme,
Gurunagar, Jaffna.

*Printed at*
*Pats Printers*
601, K. K. S. Road, Jaffna.

*Cover Design by G. Kailasanathan*

First Edition: December, 1983

Price: 5-00

படிப்பகம்

www.padippakam.com

# தேசியஇனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்

வ. ஐ. ச. ஜெயபாலன்



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
FRANCE

அலை வெளியீடு
48, சுய உதவி வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

பாரம்பரியப் பிரதேசங்கள் என்ற கருத்தாக்கத்தை முன்னிறுத்துகின்ற தமிழ் மக்களிலும், தேசிய ஐக்கிய மாயையில் மூழ்கியுள்ள முஸ்லிம் மக்களிலும் பெரும்பான்மையோர், தத்தமது பிரதேசங்களின் பல்வேறு நிலைமைகள் பற்றியும் சரியான பிரக்ஞையினைக் கொண்டுள்ளனர் என்று சொல்வதற்கில்லை. 'யாழ்ப்பாண நோக்கு நிலையினைக்' கொண்டுள்ளவர்கள் கிழக்கு மாகாணத்தைக் குறிப்பாக முஸ்லிம் மக்களை நடைமுறையில் மறந்தே போய் விடுகின்றனர். எமது பிரதேசங்கள் சார்ந்த சமூக, அரசியல், பொருளாதார ஆய்வுகள் சரிவர மேற்கொள்ளப் படாமை இதற்கான காரணிகளுள் ஒன்றாக அமையும்.

தமிழ்-முஸ்லிம் மக்களின் 'இருப்பு நிலை' அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையிலாவது போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமலிருப்பது, துர்ப்பாக்கியமானதே. இந்தப் பின்னணியிலேயே பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, இளம் ஆய்வாளரான வ. ஐ. ச. ஜெயபாலனின் முஸ்லிம் மக்களைப் பற்றிய இச் சிறுவெளியீட்டினைக், கொண்டு வருகிறோம்; ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாறுதல்களின் மூலம் பிரச்சினையின் உண்மைத்தன்மை மேலும் துலங்குவதற்கு, இது தூண்டுதலாக அமையுமெனவும் எதிர்பார்க்கிறோம்.

பின் அட்டையிலுள்ள கவிதை வரிகள் 'அஷ்ஷுரா' சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டவை. பாக்கிஸ்தானியக் கவிஞரின், இக் கவிதையினைத் தமிழாக்கியவர், முஸ்லிம் கவிஞரான 'பண்ணாமத்துக் கவிராயர்.'

நூலாசிரியருக்கும், முகப்பினை வடிவமைத்த கோ. கைலாசநாதனுக்கும், விரைவில் அச்சேற்றிய அச்சக ஊழியருக்கும் எமது நன்றிகள்.

**அலை வெளியீட்டினர்**

குருநகர்
31-12-83

படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

ஒடுக்குதல்களுக்கு எதிராகப் போராடும் வர்க்கங்களோ அல்லது தேசிய இனங்களோ, தமது சமூக அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக் சமகாலத்தில் நிலவும், தேசிய சர்வதேசிய நிலைமைகளையும் முரண்பாடுகளையும் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து தெளிவதன் மூலம் மட்டுமே, தமது போராட்டம் தொடர்பாகவும் தாம் எதிர்நோக்கும் நிர்மாணப் பணி தொடர்பாகவும், சரியானதும் தொலைநோக்குள்ளதுமான மூலஉபாயத்தையும் தந்திரோபாயங்களையும் வகுத்தல், சாத்தியப்படும்.

பல்லாயிரம் மக்களின் தலைவிதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இவ்வகையில் மட்டுமே, பொறுப்புள்ளதும் இறுதி வெற்றிக்கான மார்க்கத்தில் பொருந்துவதுமான தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும், இயக்க ரீதியாக மேற்கொள்ளுதல் இயலும்.

ரஷ்யா, சீனு, வியட்னும், அல்பேனியா, கியூபா, நிக்கரகுவா போன்ற நாடுகளில் மக்கள் தலைமைகள் விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளின் அடிப்படையிலேயே தமது தேசியப் போராட்டம், தேச நிர்மாணம் தொடர்பான மூலஉபாயங்களை வகுத்துக் கொண்டன. இவற்றை மேற்படி

படிப்பகம்

www.padippakam.com

காலகட்டங்களில் மேற்படி நாடுகள் சார்ந்து நிலவிய தேசிய, சர்வதேசிய முரண்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்ளுதல் மூலம், பயனுள்ள சர்வ தேச அனுபவங்களை நாமும் பெறுதல் அவசியமாகும். நாடுகளிடையே சமூக, கலாசார, பொருளாதார நிலைமைகள் மாறுபடுவதையும்: இயங்கியல் போக்கில் பல்வேறு வகைகளிலும் காலகட்டங்கள் மாறிச் செல்வதையும், நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

தேசியஇனப் பிரச்சினை தொடர்பாக சர்வதேச அனுபவங்கள் பலவும் பல்தேசியஇனங்கள் வாழும் நாடுகளில் (Multi—Nations Countries) புரட்சிகளின் போது இடம்பெற்ற விவாதங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றின் ஊடாகவே, நமக்குக் கிட்டுகின்றன. ஒடுக்கப்படும் ஒரு தேசியஇனம் வேறு மார்க்கங்கள் அற்றுப்போன நிலையில் தனது இருப்புக்கும், தேசிய விடுதலைக்குமாகப் போராடும் நிலைமைகளில் போதிய அளவு பங்களிப்பு, சர்வதேச ரீதியில் இடம்பெறவில்லை. பெரும்பாலான தேசியஇன விடுதலைப் போராட்டங்கள் 1840களின் பின் முதன்மை பெற்று ஒரு நூற்றுண்டினுள்ளேயே பெரும்பாலும் நடந்து முடித்து விட்டன. அது வளர்ச்சியடைந்துள்ள நர்டுகளின் முதலாளித்துவ வளர்ச்சிக் காலகட்டம் என்பதும் கருத்தில் கொள்ளப் படுதல் வேண்டும்.

போராடும் நமது தேசியஇனம் சார்பாகவும், இந்து சமுத்திரத்தில் மையப்பட்ட சர்வதேச நிலைமைகள் சார்பாகவும் சமகால நிலைமைகளை ஒட்டிய தகவல்களை விஞ்ஞான ரீதியா

படிப்பகம்

www.padippakam.com

கத் திரட்டிப், பகுத்தாய்ந்து நமது விடுதலையின் மார்க்கத்தைக் கண்டு கொள்ளுதல் மூலம் மட்டுமே நமக்கும், சர்வதேசியத்திற்கும் உருப்படியான வரலாற்றுப் பங்களிப்பை நாம் செய்தல் கூடும்.

நான் எழுதி வரும் **எமது மண்ணும் எமது வாழ்வும்** என்ற நூலின் ஒரு பகுதியான 'தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்' என்ற அத்தியாயத்தை, அவசியம் கருதிச் சிரமம்பாராது வெளியிட முன்வந்தமைக்காக, அலை வெளியீட்டாளர்களுக்கு எனது நன்றிகள்.

எனது சிரமம் நிறைந்த பொருளாதார நிலையில், இந்த ஆய்வுகளைத் தொடர பல்வேறு வகைகளிலும் உதவியாக இருந்த அம்மாவுக்கும், சகோதரிகளுக்கும் எனது நன்றிகள். திக்குவல்லையில் இருந்து யாழ்ப்பாணம் முஸ்லிம் தெரு வரைக்கும், பேருவலையில் இருந்து கல்முனை வரைக்கும் சகல விதத்திலும் எனக்கு கற்பித்த முஸ்லிம் மக்களுக்கும், முஸ்லிம் நண்பர்களுக்கும் எனது விசேட நன்றிகள்.

எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு பணியாற்றப் போகிற தமிழ், முஸ்லிம், மலையக இளைஞர்களுக்கு இந்நூல் காணிக்கை.

வ. ஐ. ச. ஜெயபாலன்

61, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
25-12-1983

படிப்பகம்

www.padippakam.com

# தேசியஇனப் பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்

## இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் பொதுப் பண்புகள்

இலங்கைத் தீவின் தமிழ் பேசும் மக்களுள் 28 சத வீதத்தினர் இலங்கைச் சோனகர் (Sri Lankan Moor) என உத்தியோக பூர்வமாகக் குறிப்பிடப்படும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களாவர்.

இலங்கைத் தீவின் தமிழ் பேசும் மக்களுள் இரண்டாவது பெரும் பிரிவினரான இவர்கள், இலங்கையில் வாழும் மொத்த முஸ்லிம் சமயத்தவர்களுள் 93 . 16 சத வீதத்தினராக அமைவதினால், முஸ்லிம் மக்கள் என்ற பதம் இலங்கையைப் பொறுத்துப் பொதுவாகத் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையே குறிப்பிடுகின்றது. இலங்கையில் இவர்களே அடிப்படை முஸ்லிம் சமூகத் தொகுதியினராவர்.

படிப்பகம்

www.padippakam.com

1981ம் ஆண்டின் குடிசன மதிப்புப் புள்ளி விபரங்களின்படி, தமிழ் பேசும் மக்களதும் முஸ்லிம் சமயத்தவர்களதும் குடித்தொகை பின்வருமாறு அமைந்துள்ளது.

## தமிழ்பேசும் மக்களும், இனப் பிரிவுகளும்

| இனப்பிரிவு | தொகை | சத வீதம் |
|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 1,871,535 | 49.9 |
| இந்தியத் தமிழர் | 825,233 | 22.0 |
| இலங்கைச் சோனகர் (தமிழ் பேசும் முஸ்லிம்கள்) | 1,056,972 | 28.1 |
| அனைத்துத் தமிழ் பேசும் மக்கள் | 3,753,740 | 100.0 |

## முஸ்லிம் சமயத்தைச் சார்ந்தவர்களும், பிரிவுகளும்

| பிரிவு | தொகை | சத வீதம் |
|---|---|---|
| இலங்கைச் சோனகர் (தமிழ் பேசும் முஸ்லிம்கள்) | 1,056,972 | 93.2 |
| மலாயர் (யாவகர்) | 43,378 | 3.8 |
| போறு, மேமன் முதலிய ஏனைய முஸ்லிம்கள் | 34,195 | 3.0 |
| | 1,134,556 | 100.0 |

இலங்கை முஸ்லிம்களின் அடிப்படை சமூகத் தொகுதியான தமிழ் பேசும் முஸ்லிம்கள் (இலங்கைச் சோனகர்) இஸ்லாம் மதத்தின் சுனி பிரிவை சேர்ந்தவர்கள்: இவர்கள், ஷாபி மதுஹபைப் பின்பற்றுகின்றவர்களாவர்.

'பாய்' எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தவூதி போறு' சமூகப் பிரிவினர் ஷியா மதப்பிரிவை பின்பற்றுபவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பொதுவாக மலாயரும், மேமன் சமூகத்தவர்களும் தமிழ் பேசும் முஸ்லிம்களைப் (Sri Lankan Moor) போல, 'சுனி' மதப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். மேமன் சமூகத்தவர்கள் 'ஹனபி மதுஹபை' பின்பற்றுகின்றனர். இக்காரணங்களால் ஷியா மதப் பிரிவைச் சேர்ந்த 'போரு' சமூகத்தவர்கள் போல தனித்து வாழாது சுனி மதப்பிரிவைச் சேர்ந்த மலாயரும், மேமன் சமூகத் தவர்களும் தமிழ் பேசும் முஸ்லிம்களுடன் தொடர்பு கொண்ட வர்களாகவும் தமிழ் அறிந்தவர்களாகவும் உள்ளனர்.

வட இந்தியாவைச் சேர்ந்தவர்களான மேமன், போரு சமூகத் தவர்கள் தத்தமது வீட்டு மொழியாக முறையே 'உருது' 'குஜ ராத்தி' மொழிகளைப் பேணி வருகின்றார்கள். இவர்கள் பெரும்பா லும் பெரும் உடுபுடவை, ஏனைய நுகர்ச்சிப் பொருள் வர்த்தகர் களாக பெருநகர்களில் வாழ்கின்றனர்.

'யாவகர்' எனவும் அழைக்கப்படும் மலாயர், டச்சுக் காலனி ஆட்சிக் காலத்தில் யாவாத் தீவில் இருந்து போர்வீரர்களாக அழைத்து வரப்பட்டவர்களது வம்சா வழியினராவர்.

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களில் ஏறக்குறைய 40 சத வீதத்தினர், தமிழ் பேசும் மாநிலத்தில் தமது பாரம்பரியப் பிர தேசங்களில் வாழ்கின்றனர். சிங்கள மாநிலத்தில் வாழும் ஏனைய 60 வீதத்தினர் பெரும்பாலும் நகரங்களை பொறுத்து, பாரம்பரிய முஸ்லிம் வட்டாரங்களிலும்; நாட்டுப்புறங்களைப் பொறுத்து, பாரம்பரிய முஸ்லிம் கிராமங்களிலும், வாழ்கின்றனர்.

தமிழ் மாநிலத்தில் வாழும் முஸ்லிம்கள் பொதுப்பட கிராம வாசிகளாக விவசாயம், கடற்றொழில் சார்ந்த பொருளாதார முயற்சிகளில் ஈடுபட; சிங்களப் பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக் கள், நகர்ப்புறம் சிறு பட்டினங்கள் சார்ந்து பெரிய, சிறிய வர்த் தக முயற்சிகளிலும் பண்ணை விவசாயப் பொருட்களைச் சந்தைப் படுத்துதல், போக்கு வரத்து போன்ற தனியார்துறை முயற்சி களிலும் முதன்மையாக ஈடுபட்டுள்ளனர்.

கற்றறிந்தவர் தொகையும், உத்தியோகத்துறையில் ஈடுபட்ட மத்தியதர வகுப்பினரின் தொகையும் கொழும்பு கண்டி போன்ற சிங்களப் பகுதி முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமே, இது காறும் பரவலாகக் காணப்படுகின்றது.

குருநாகல் மாவட்டம் கண்டி மாவட்டம் போன்ற சிங்கள மாநிலத்தின் சில பகுதிகளில் புறநடையாகத் தென்னை,



படிப்பகம்

www.padippakam.com

ரப்பர் போன்ற சிறு தோட்டத் துறைச் சொந்தக்காரர்களாகவும் நெல் விவசாயிகளாகவும், முஸ்லிம்களில் சிறு பகுதியினர் வாழ்கின்றனர்.

முஸ்லிம் மக்களின் உயர் வர்க்கப் பிரிவும், மத்தியதர வர்க்கமும் சிங்களப் பகுதிகளில்—குறிப்பாக மேற்குக் கரையோர மாவட்டங்களான கொழும்பு, களுத்துறை, காலி மாவட்டங்களிலும் கண்டி மாவட்டத்திலும், பாரம்பரியமாக முதன்மை பெற்று அமைந்தன.

இவர்கள் பெரும்பாலும் வர்த்தகம், தனியார்துறை முயற்சிகள் சார்ந்த பணக்காரர்களாவர். தமிழ் பேசும் மாநிலத்து வாழும் முஸ்லிம்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே கல்வியும், மத்தியதர வர்க்க வளர்ச்சியும் முதன்மை பெற்றது. எனினும் இங்கு மொத்தக் குடிசனத் தொகையில் 1.6 சத வீதத்தினரே, முஸ்லிம்களாக அமைந்தனர்.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் விவசாயத்தில் ஈடுபடாமல் நகர் சார்ந்து வர்த்தகம், சிறு தொழில்கள், அரசாங்க, தனியார் துறைப் பணிகள் என்பவற்றில் முதன்மையாக ஈடுபட்டுள்ளனர். நயினுதீவில் சிறு தொகையினராக வாழும் முஸ்லிம்கள் மட்டும் நகர் சாராது சங்கு குளித்தல், மீன்பிடித்தல் போன்ற கடற்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். தோல் வேலை, கூலி வேலை என்பவற்றில் ஈடுபட்டுள்ள செம்மா தெரு முஸ்லிம்கள் மத்தியில், மிகவும் மோசமான வறுமை நிலை காணப்படுகின்றது.

இத்தகைய சமூக, குடித்தொகைப் பின்னணிகள் காரணமாக யாழ்ப்பாணம் சார்ந்து முஸ்லிம் தலைமைத்துவம் ஒன்று ஏற்படும் வாய்ப்புகள், இருக்கவில்லை.

இதனுல், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கற்றறிந்த முஸ்லிம் மேலோர் பலரும், கொழும்பு சார்ந்த முஸ்லிம் வர்த்தகத்தலைமைக்குச் சேவை செய்பவர்களாகவே அமைய நேர்ந்தது.

மேலும் கொழும்பு முஸ்லிம்களின் வர்த்தக மேலோர் தலைமையானது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களையும், தமது வர்த்தகப் பணித்துறை சமயத்துறைத் தொடர்புகளூடாகக், கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பைப் பெற்றது.

இத்தகைய ஒரு நிலைமையில் இந்நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்தே இலங்கை முஸ்லிம்களின் தலைமை, பொதுவாக வர்த்தக



படிப்பகம்

www.padippakam.com

நலன்களை முதன்மையாகக் கொண்டிருந்த கொழும்பு சார்ந்த முஸ்லிம் உயர் வர்க்கத்தினரின் தலைமையாகவே, அமைந்தது. இவர்கள் கொழும்பு சார்ந்த தமது வர்க்க நலன்களை முதன்மைப்படுத்துவதற்காக, தமிழ் பேசும் மாநிலத்தில் தமது பாரம்பரிய பிரதேசங்களிலும்; சிங்கள மாநிலத்தில் தமது பாரம்பரியக் கிராமங்களிலும், நகர வட்டாரங்களிலும் வாழும் ஏனைய சாதாரண முஸ்லிம் மக்களது எதிர்காலத்தைச், சிங்கள பௌத்த பேரினவாதிகளின் தயவில் விட்டுவிட்டனர்.

இத்தகைய துரோகத்தனமான கொழும்புத் தலைமைகளின் போக்கால், தமிழ் மாநிலத்தில் முஸ்லிம் பிரதேசங்களையும் அவற்றை அண்டிய பிரதேசங்களையும்: சிங்கள மாநிலத்தில், பாரம்பரிய முஸ்லிம் கிராமங்களைச் சார்ந்த பல நூற்றுக்கணக்கான சதுரமைல் பிரதேசத்தையும், சிங்கள பௌத்த பேரினவாத அரசும் அரசின் துணைபெற்ற சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றக்காரர்களும், இலகுவாக அபகரித்து வருகின்றனர்.

இலங்கைத் தீவடங்கிலும் முஸ்லிம் மக்களது பிரதேசங்களதும், கிராமங்களதும் எல்லைகள் குறுகிச் செல்லும் நிலைமை, முஸ்லிம் மக்களது குடிசன வளர்ச்சி வீதம் ஏனைய இனப்பிரிவுகளின் குடிசனவளர்ச்சி வீதத்தினை விடவும் அதிகரித்த போக்கைக் கொண்டுள்ள பின்னணியில், விளங்கிக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## முஸ்லிம் மக்களின் குடிசனஅமைப்பின் விசேட பண்புகளும் அதன் விளைவுகளும்

இலங்கை முஸ்லிம் மக்களது குடிசன அமைப்பு மூன்று முக்கிய அடிப்படைப் பண்புகளால் தமிழரதும், சிங்களவரதும் குடிசன அமைப்பில் இருந்தும் மாறுபட்டுள்ளது.

(அ) தமிழ்பேசும் மாநிலத்திலும், சிங்கள மாநிலத்திலுமாக பிளவுபட்ட சமூக புவியியற் பின்னணியில் வாழ்தல்.

(ஆ) அம்பாறை மாவட்டம் புற நீங்கலாக ஏனைய மாவட்டங்களைப் பொறுத்து தமிழ் பேசும் மாநிலத்திலும் சரி, சிங்கள மாநிலத்திலும் சரி புவியியற் தொடர்ச்சியை இழந்து சிதறிய சமூகத் தொகுதிகளாக வாழ்தல்.



படிப்பகம்

www.padippakam.com

(இ) தமிழ்பேசும் மக்களான இவர்களுள் பெரும்பான்மையினர்—ஏறக்குறைய 60 சத வீதத்தினர் சிங்கள மாநிலத்தில், சிதறிய சமூகத் தொகுதிகளாக வாழ்தல்.

தமிழ் மக்களைப் போலவோ, சிங்கள மக்களைப் போலவோ, தத்தமது மொழி வழங்கும் மாநிலங்களுள் வாழும் பண்பை, முஸ்லிம் மக்கள் பெற்றிருக்கவில்லை என்பதும்: தமிழ் வழங்கும் மாநிலத்தில் 40 சத வீதத்தவர்கள் மட்டுமே வாழ்கின்றனர் என்பதும், இங்கு கவனத்திற்குரியனவாகும். இதைவிட மேலும் சிக்கலான ஒரு பண்பு, முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியான புவியியல் பிரதேசங்களில் வாழாமல் இலங்கைத் தீவு முழுவதும், சிதறி வாழ்வதாகும்.

சிதறி வாழ்வதனால், ஒரு பலமான தேசிய இனமாக வளர்ச்சி பெறுவதற்கு அவசியமான பொதுப் புவியியற் பிரதேசம் அற்றவர்களாகவும், பலமான இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் தொடர்புச் சாதனங்களைப் பொறுத்தும் (Communication): தொடர்புபட்ட சமூக, பொருளாதார நலன்களைப் பொறுத்தும் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குபவர்களாகவும், முஸ்லிம் மக்கள் உள்ளனர்.

முஸ்லிம் மக்களில் பெரும் பகுதியினர் சிங்களப் பகுதிகளில் வாழ்வது, தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் முழுத் தொகுதியாக ஏனைய தமிழ் மக்களுடன் இணைந்து, தமது பொது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான மூல உபாயம் (Strategy) ஒன்றை வகுத்துக் கொள்வதையும், சிக்கலான பணியாக்கியுள்ளது.

1981ம் ஆண்டின் புள்ளி விபரங்களின் அடிப்படையில் அமைந்த பின்வரும் அட்டவணைகள், சிங்கள மாநிலத்தை முஸ்லிம் மக்களது அடிப்படைப் பிரதேசமாகக் கொள்ளும் முஸ்லிம் தலைவர்களது மூல உபாயத்தின் பொருத்தப்பாடின்மையைத், தெளிவாகக் காட்டுகின்றன.

முஸ்லிம் மக்களது தலைமை கொழும்பில் மட்டுப்பட்டிருந்த காலக் கட்டம் இன்று மாறிவருகின்றது. கொழும்பின் வெளியே சாதாரண முஸ்லிம் மக்களிடையே கல்வியும், மத்தியதர வர்க்க வளர்ச்சியும் விரிவடைந்து வரும் இத்தருணத்தில், முஸ்லிம்களின் அரசியல் மூல உபாயம் எப்படி அமைதல் வேண்டும் என்ற ஆய்வுக்கு, குடித்தொகை தொடர்பான விஞ்ஞான பூர்வமான விளக்கமும், ஆய்வும் அவசியமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## முஸ்லிம் மக்களின் குடித்தொகைப் பரம்பல்
## 1981ம் ஆண்டுப் புள்ளி விபரம்

| வரிசை | மாவட்டம் | முஸ்லிம்கள் | சோனகர்கள் (தமிழ் பேசும் முஸ்லிம்கள்) | மாவட்ட சனத்தொகையில் சோனகரின் வீதாசாரம் |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 168,956 | 161,481 | 8.3 |
| 2 | அம்பாறை * | 161,754 | 140,461 | 41.6 |
| 3 | கண்டி | 125,646 | 112,052 | 9.9 |
| 4 | மட்டக்களப்பு * | 79,662 | 79,317 | 24.0 |
| 5 | திருகோணமலை * | 75,761 | 74,403 | 29.0 |
| 6 | குருநாகல் | 64,231 | 61,342 | 5.1 |
| 7 | களுத்துறை | 62,781 | 61,706 | 7.5 |
| 8 | புத்தளம் ** | 50,246 | 47,959 | 9.7 |
| 9 | கம்பஹா | 47,850 | 38,607 | 2.8 |
| 10 | அனுராதபுரம் | 43,801 | 41,833 | 7.1 |
| 11 | கேகாலை | 36,548 | 34,832 | 5.1 |
| 12 | மன்னார் * | 30,079 | 28,464 | 26.6 |
| 13 | பதுளை | 28,759 | 26,808 | 4.2 |
| 14 | மாத்தளை | 26,603 | 25,836 | 7.2 |
| 15 | காலி | 26,359 | 25,896 | 3.2 |
| 16 | பொல்லநறுவை | 17,621 | 17,091 | 6.5 |
| 17 | மாத்தறை | 16,853 | 16,457 | 2.6 |
| 18 | நுவரெலியா *** | 15,791 | 14,668 | 2.8 |
| 19 | இரத்தினபுரி | 15,441 | 13,531 | 1.7 |
| 20 | யாழ்ப்பாணம் * | 14,169 | 13 757 | 1.6 |
| 21 | அம்பாந்தோட்டை | 9,333 | 4,732 | 1.1 |
| 22 | வவுனியா * | 6,764 | 6,640 | 6.9 |
| 23 | மொனராகலை | 5,750 | 5,322 | 1.9 |
| 24 | முல்லைத்தீவு * | 3,816 | 3,777 | 4.9 |

* தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மாவட்டங்கள்

** புத்தளம் மாவட்டத்தின் வடபகுதி, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகும்.

*** மலையகத் தமிழ் மக்களின் மாவட்டம்

படிப்பகம்

www.padippakam.com

## முஸ்லிம் மக்களின் குடித்தொகைப் பரம்பல் 1981ம் ஆண்டுப் புள்ளி விபரம்

| ௧ ௨ ௩ ௪ | மாவட்டங்கள்— தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் வீதாசார வரிசையில் | மாவட்டச் சனத் தொகையில் தமிழ்முஸ்லிம் மக்களின் வீதாசாரம் | மாவட்டத்தின் முதன்மையான மொழி |
|---|---|---|---|
| 1 | அம்பாறை | 41.6 | தமிழ் |
| 2 | திருகோணமலை | 29.0 | தமிழ் |
| 3 | மன்னார் | 26.6 | தமிழ் |
| 4 | மட்டக்களப்பு | 24 0 | தமிழ் |
| 5 | கண்டி | 9 9 | சிங்களம் |
| 6 | புத்தளம் | 9.7 | சிங்களம் |
| 7 | கொழும்பு | 8.3 | சிங்களம் |
| 8 | களுத்துறை | 7.5 | சிங்களம் |
| 9 | மாத்தளை | 7.2 | சிங்களம் |
| 10 | அனுராதபுரம் | 7.1 | சிங்களம் |
| 11 | வவுனியா | 6.9 | தமிழ் |
| 12 | பொல்லநறுவை | 6.5 | சிங்களம் |
| 13 | குருநாகல் | 5.1 | சிங்களம் |
| 14 | கேகாலை | 5.1 | சிங்களம் |
| 15 | முல்லைத்தீவு | 4.9 | தமிழ் |
| 16 | பதுளை | 4.2 | சிங்களம் |
| 17 | காலி | 3.2 | சிங்களம் |
| 18 | கம்பஹா | 2.8 | சிங்களம் |
| 19 | நுவரெலியா | 2.8 | தமிழ் (மலையகம்) |
| 20 | மாத்தறை | 2.6 | சிங்களம் |
| 21 | யாழ்ப்பாணம் | 2.4 | தமிழ் |
| 22 | மொனராகலை | 1.9 | சிங்களம் |
| 23 | இரத்தினபுரி | 1.7 | சிங்களம் |
| 24 | அம்பாந்தோட்டை | 1 1 | சிங்களம் |

நீண்டகால இலங்கை அரசியல் வரலாறு பிரதேச ரீதியான முதன்மை பேணப்படுவதன் அவசியத்தைச், சிறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு உணர்த்தி வந்துள்ளது.

முஸ்லிம் மக்களைப் பொறுத்து மொழி ரீதியாக தமிழ்பேசும் மக்களாக உள்ளமை, பிரதேச ரீதியாக தமிழ்பேசும் மாநிலங்



படிப்பகம்

www.padippakam.com

களில் மட்டுமே முதன்மை பெறுபவர்களாக உள்ளமை, என்ற இரு முக்கிய யதார்த்த நிலைமைகளைப் புறக்கணித்துவிட்டுக், கொழும்பில் வாழும் உயர்வர்க்க முஸ்லிம்களின் அரசியல் பேரம் பேசும் சக்தியே தயவு என அரசியல் செய்தல், இனியும் பொருத்தமானதல்ல.

8ம் பக்கத்தில் இடம்பெறும் அட்டவணை இதனை மேலும் தெளிவாகக் கோடிட்டுக் காட்டும்.

இலங்கைத் தீவின் 24 மாவட்டங்களிலும் வீதாசார அடிப்படையில் முஸ்லிம் மக்கள் முதன்மைபெறும் நான்கு மாவட்டங்களும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்குக், கிழக்கு மாகாணங்களிலேயே அமைந்துள்ளன.

இலங்கைத் தீவில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஒரே மாவட்டமான அம்பாறை மாவட்டம் இவற்றுள் ஒன்றாக, தமிழ்பேசும் மாநிலத்தில் அமைந்துள்ளது. இலங்கைத் தீவில் அதிக வீதாசாரத்தில் முஸ்லிம் மக்கள் வசிக்கும் ஒரே மாகாணமும் கிழக்கு மாகாணமேயாகும். இங்கு முஸ்லிம் மக்கள் மொத்த சனத்தொகையில் 32·4 சத வீதத்தினராக உள்ளனர். கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் (அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு), வீதாசார அடிப்படையில் முஸ்லிம் மக்கள் முதன்மைபெறும் நான்கு மாவட்டங்களுள் அடங்குகின்றன. வீதாசார அடிப்படையில் மூன்றாவதாக முதன்மைபெறும் மன்னார் மாவட்டமும், தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த வடமாகாணத்துள்ளேயே அடங்குகின்றது.

மன்னார் மாவட்டத்தின் தொடர்ச்சியாக மேற்குக் கடற்கரை சார்ந்து பொம்பரிப்பு, வண்ணாத்திவில்லு, புத்தளம் நகரம், கற்பிட்டிக் குடாநாடு, உடப்பு கிராமசபை என்பவற்றை உள்ளடக்கும் புத்தளம் தேர்தல் தொகுதி, அம்பாறை மாவட்டம் போலவே முஸ்லிம் மக்கள் முதன்மைபெறும் மற்றொரு, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாகும்.

1958ம் ஆண்டிலும், 1976ம் ஆண்டிலும் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழுவின் மதிப்பீடுகளின்படி, புத்தளம் தேர்தல் தொகுதியின் குடிசனப் பண்புகள் பின்வருமாறுஅமைகின்றது.



படிப்பகம்

| ஆண்டு | சிங்களவர் | முஸ்லிம்கள் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| 1958 | 34·7 | 41·0 | 18·9 | — | 5·4 |
| 1976 | 37·9 | 38·5 | 19·9 | 2·9 | ·73 |

புத்தளம் தேர்தல் தொகுதி ஏறக்குறையப் புத்தளம் மாவட்டத்தின் மூன்றிலொரு பகுதியைக் கொண்டுள்ளது. அனைத்துப் புத்தளம் மாவட்டத்தினதும் குடித்தொகைப் பண்பு 1981ம் ஆண்டு பின்வருமாறு அமைந்துள்ளது.

| சிங்களவர் | முஸ்லிம் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|
| 82.6 | 9·7 | 6·7 | 0·6 | 0·4 |

புத்தளம் தேர்தல் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு புத்தளம் — கற்பிட்டி மாவட்டம் உருவாக்கப்படுதல் வேண்டும். இப்பிரதேசம் வடக்குக் கிழக்கு மாகாணங்களுடன், பொதுவான சமூக அரசியல் பொருளாதார நலன்களைக்கொண்ட பகுதியாகும்.

தமிழ்நாடு மாநிலத்தில் முஸ்லிம் மக்கள் முன்மைபெற்ற போதிலும் விவசாயிகளாகவும், கிராமவாசிகளாகவும் வாழும் அவர்களது மத்தியில் — நகர்மயமான மேற்கு மாகாண முஸ்லிம் மக்களிடம் காணப்படுவது போன்ற உயர் வர்க்கங்களாலும், மத்தியதரவர்க்கத்தினதும் பரவலான வளர்ச்சி, காணப்படவில்லை.

யாழ்ப்பாணம் இதற்குப் புறநடையாக இருப்பினும் இங்கு, (தொகை ரீதியாக 20ம் இடத்தையும், வீதாசார அடிப்படையில் 21ம் இடத்தையும் வகிக்கும் யாழ்ப்பாணத்தில்) தலைமைத்துவம் வளரக் கூடிய அளவு முஸ்லிம் மக்களது செறிவு, அமையவில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே கல்வியில் முதன்மை பெறத் தொடங்கிய யாழ்ப்பாணத்து முஸ்லிம் கல்விமான்கள், கொழும்பு வர்த்தகத் தலைமைக்குச் சேவை செய்பவர்களாகவே காலம்கழிக்க நேர்ந்தது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

சிங்கள மாநிலத்தில் கொழும்பு சார்ந்து மேற்கு மாகாணத்திலும், கண்டி மாவட்டம் சார்ந்து மத்திய மாகாணத்திலுமே முஸ்லிம்கள் தொகை ரீதியாக முதன்மை பெறுகின்றனர். இதனும் முஸ்லிம் மக்களது மத்தியில் காணப்படும் உயர் வர்க்கம், மத்தியதர வர்க்கம் என்பவை பாரம்பரியமாக இப் பிரதேசங்களிலேயே முதன்மை பெற்றிருந்தன. அண்மைக் காலம் வரை இந்த முதன்மை பாதிக்கப்படவில்லை. இதனுல் பொதுவாக அனைத்து முஸ்லிம் மக்களது தலைமை கொழும்பு, கண்டி சார்ந்த உயர் வர்க்கங்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் சிலரின் கைகளிலேயே இதுகாறும் இருந்து வந்தது.

இன்று நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இந் நாட்களில் கொழும்புக்கு வெளியே ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் மத்தியில் கல்வியும், மத்தியதர வர்க்க வளர்ச்சியும் பரவலாகி வருவதும்; துரோகத்தனமான தலைமைகள் மீதான கடுமையானதும், துணிவானதுமான விமர்சனங்கள் பரவலாகி வருவதும், புதிய தலைமை பற்றிய சிந்தனை வலுவடைந்து வருவதும், சிங்கள பௌத்த பேரினவாதிகளின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விடயங்கள் அல்ல.

சிங்கள மாநிலத்தில் நகரங்கள், கிராமங்கள் என்று முஸ்லிம் மக்கள் சிதறிய தொகுதிகளாக வாழ்ந்தபோதும். தாம் வாழும் பிரதேசங்களைப் பொறுத்து தொகைரீதியாகவோ, வீதாசார ரீதியாகவோ முதன்மை பெறவில்லை. எனினும். பல்வேறு சிங்கள நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிகளில் முஸ்லிம் மக்கள் கணிசமான அளவு வாழ்கின்றனர்.

இதுகாலவரை, சிறுசிறு நாடாளுமன்றத் தேர்தல் தொகுதி அடிப்படையில் தேர்தல்கள் இடம் பெற்று வந்தமையால் சிங்கள மாநிலத்தில் மேல்மாகாணம், மத்தியமாகாணம் சார்ந்த பல தேர்தல் தொகுதிகளில் இறுதி வெற்றியை தீர்மானிக்கும் சமூகப் பிரிவாக, முஸ்லிம் மக்கள் அமைந்தனர்.

இந்நிலைமை, முதலாளித்துவ அரசியலைக் கையாளத்தக்க பணபலமுள்ள உயர்வர்க்க முஸ்லிம் சீமான்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி (U. N. P.), சிறீலங்கா சுதந்திரக் கட்சி (S. L. F. P.) போன்ற சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளுடன் அரசியல் பேரம் பேசுவதற்கு, வாய்ப்பாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

சில சந்தர்ப்பங்களில், முஸ்லிம் சீமான்களும் தலைவர்களும் சிங்கள மாநிலத்தில் அறுபதிற்கும் மேற்பட்ட தொகுதிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பலம் தங்களது கையில் இருப்பதாக, நியாயபூர்வமாகவே ஐம்பம் அடித்து வந்துள்ளனர்.

எனினும் வரலாற்றிலிருந்து தமிழர்கள் கற்றுக் கொண்ட பாடத்தை முஸ்லிம் மக்களும் கற்றுக் கொள்வதை அவசியமாக்கும் நடவடிக்கைகளைச், சிங்கள பௌத்த பேரினவாத அரசு தேர்தல் தொகுதிகள் சம்பந்தமாகவும், மேற் கொண்டது.

ஒருபுறம், பணபலம் வாய்ந்த முஸ்லிம் உயர் வர்க்கங்களின் நலன்களில் சிங்கள பௌத்த உயர் வர்க்கமும் அவற்றின் தலைமைகளும், நேரடியாகவே கைவைக்க ஆரம்பித்து விட்டன. மறுபுறம், அவை சிறு தொகுதி அடிப்படையிலான நாடாளுமன்ற தேர்தல் முறையைக் கைவிட்டு விட்டு, மலையகத் தமிழர் முதன்மை பெறும் நுவரெலியா—மஸ்கெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய சிங்கள மாநிலம் முழுவதும், எவர் தயவுமின்றி தமது ஆதிக்கத்தை ஸ்தாபிக்கத்தக்க வகையில், பெரும் மாவட்ட அடிப்படையிலான வீதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பின் மூலம், புகுத்தியுள்ளன.

புதிய நிலைமைகளில் முஸ்லிம் உயர் வர்க்கங்கள் அரசியலிலும்சரி, சமூக பொருளாதார ரீதியிலும் சரி தமக்கிருந்த பேரம் பேசும் சக்தியின் இரண்டு முக்கிய அடிப்படைகளையும் பறிகொடுத்து விட்டன எனலாம். இலங்கையில் தமிழர்களது வரலாற்றை அறிந்த எவரும், முஸ்லிம்களின் வரலாறும் அதே தடத்தினில் தள்ளிவிடப் பட்டுள்ளதைப் புரிந்து கொள்ள முடியும். முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும், அரசபயங்கரவாத சம்பவங்களும், 1970 களிலிருந்து சிதறிய அடிப்படையில் அதிகரித்து வருவது, அவர்களது வரலாறும் ஏனைய தமிழ்பேசும் மக்களது வரலாற்றுத் தடத்திலேயே நகர்ந்து வருகின்றது என்பதைத், தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இந்நிலைமைகளில், வேறொரு வரலாற்று அம்சத்திலும் தமிழ் மக்களது அரசியல் வரலாற்றின் பண்பை முஸ்லிம் மக்களும் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. கொழும்புசார் உயர்வர்க்கங்களின் தலைமைகளை உதறித்தள்ளி, தமது அடிப்படைப் பிரதேசங்களின் நலன்களுடன் தமது தலைமையைப் புதிதாக ஸ்தாபித்துக் கொள்ளும் போக்கையே, நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கொழும்புக்கு வெளியில் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்



படிப்பகம்

www.padippakam.com

பட்டு வரும் வர்க்கஅமைப்பு ரீதியான மாற்றங்களையும், விழிப்புணர்வையும் ஏனைய தமிழ்மக்கள் புறக்கணித்து விட முடியாது.

இதுகாறும் கொழும்புசார் முஸ்லிம் சீமான்கள், தமது கைகளுள் இரத்தினக்கல் வர்த்தகத்தை வைத்திருப்பதற்காக ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களது நலன்களையும், அவர்களது பாரம்பரிய மண்ணின் பாதுகாப்பையும் சிங்களப் பேரினவாதிகளின் அபிலாசைகளுக்குத், தத்தம் செய்து வந்தனர்.

இன்று, புதிய நிலைமைகளில் இரத்தினக்கல் உட்பட பல் துறை வர்த்தக முதன்மைகளையும், கொழும்பு சார் மேல்வர்க்கங்கள் இழந்து வருகின்றன.

அவர்களது மரபுசார்ந்த அடிப்படை வர்த்தக முயற்சிகளில் முதன்மையான இரத்தினக் கல் வர்த்தகம் தொடர்பாக, மரபு சார் இரத்தினக்கற் சுரங்கப் பகுதிகள் கைவிடப்பட்டு வருவதும்: புதிய சுரங்கங்கள் திறக்கப்படும் மாத்தளை, மொனராகலை, அம் பாந்தோட்டை போன்ற பகுதிகளில் இரத்தினக் கல் வர்த்தகம் இனவாத அரசுகளின் ஆதரவுடன் சிங்களவர்களது கைகளுக்கு மாறி வருவதும்: மொத்த வியாபாரத்தில் அரசு ஈடுபட்டு முஸ்லிம் மக்களின் முதன்மையை உடைத்துள்ளமையும், இங்கு கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இது ஓர் உதாரணம் மட்டுமே. தமிழ், முஸ்லிம் வர்த்தக முதலாளித்துவங்களுக்கும், உயர்வர்க்கங்களுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசினதும் தீர்ப்பு ஒரே மாதிரியானதாகவே அமைந்துள்ளது.

இன்று,
முஸ்லிம் மேலோர்களது கையுள்
பாரம்பரியமாக நிலவிய இரத்தினக்கற்களும்
பறிபோய்விட்டன.
சாதாரண முஸ்லிம் மக்களது கால்களின்கீழ்
பாரம்பரியமாக நிலவிய மண்ணும்
பறிபோய்விட்டது.

கொழும்புசார் முஸ்லிம் உயர்வர்க்கங்கள், தமது அரசியல் வியாபாரத்தில் இதுகாறும் நிலவி வந்த பேரம்பேசும் சக்தியை வேகமாக இழந்து வருகின்றன.

'சபாநாயகர்' பதவி போன்ற உயர் அரசியல் பதவிகளில் இருந்து கேட்டுக்கேள்வியின்றியே தூக்கி வீசப் படும் போக்கு, ஒருபுறமாகவும்: பல்வேறு பிரதேசங்களையும் சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com

தமது எடுபிடிகளுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய எலும்புத் துண்டுகளை, அரசிடம் இருந்து பெறும் மார்க்கங்கள் அடைக்கப்பட்டு வருவது மறுபுறமாகவும், கொழும்புசார் முஸ்லிம் சீமான்களின் தலைமை, பலத்த நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றது. இப் புதிய போக்கை 'அராபிய எண்ணெய்ப்' பூச்சாண்டிகள் மூலமோ அல்லது, மேலும் மேலும் சரணாகதி அடைவதன் மூலமோ தடுத்து நிறுத்த முடியும் என்ற முட்டாள்தனமான நம்பிக்கையில், கொழும்பு முஸ்லிம் சீமான்கள் நம்மை அழித்துக் கொள்வார்கள் போலத், தெரிகிறது.

## தமிழ்த் தேசியவாதத்தின் பிளவுகளும்: முஸ்லிம் மக்களும்

**20** ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் உருவான இலங்கைத் தேசியவாதம், தனது ஆரம்ப தசாப்தங்களிலேயே இனரீதியாகப் பிளவுபட ஆரம்பித்தது.

இப்பிளவு, 1870களில் முதன்மை பெறத் தொடங்கிய சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் அனைத்து இலங்கைத் தேசியவாதத்தில் செல்வாக்குச் செலுத்தத்தொடங்கி அதன் தலையாய போக்காக இந்திய விரோத, முஸ்லிம் விரோதத் தன்மைகளுடன் வளரத் தொடங்கியதால், உருவாகியது.

இந்தியாவில் தோன்றியதுபோல நாடு முழுவதுமுள்ள சந்தை வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட சுதேசிய கைத்தொழில் முதலாளித்துவம், இலங்கையில் அமையவில்லை. பிரதேச முதன்மைக்குப் போட்டியிடும் வர்த்தக முதலாளித்துவத்தின் தோற்றத்தினதும், வளர்ச்சியினதும் அரசியல் வெளிப்பாடாகவே இலங்கைத் தேசியவாதத்தின் தோற்றமும், வளர்ச்சியும் அமைந்தன.

ஆரம்பத்தில் கொழும்பு நகரிலும் கண்டி நகரிலும் முதன்மைப்பட்ட சுதேசிய வர்த்தக முதலாளித்துவ எழுச்சியின்போது, மரபு சார்ந்து வரலாற்றுக்காலம் தொட்டு வர்த்தகத்துறையில் செல்வாக்குச் செலுத்திவந்த முஸ்லிம்கள், முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தனர். இலங்கையின் முக்கிய வர்த்தகத்துறைகள் பிரிட்டிஷாரதும், இந்தியர்களதும், முஸ்லிம்களதும் கைகளில் இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

19ம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் புதிதாக உருவாகிய வர்த்தக முதலாளிகளில் பெரும் பங்கினர், சிங்களவர்களாக அமைந்தனர். இக் காலகட்டத்தில் கல்வி சார்ந்த மேலோர்களாக கொழும்பில் உயர் தொழில்களில் குவிந்த யாழ்ப்பாணத் தமிழர்களும், கொழும்பு சார்ந்து வர்த்தகத் துறையில் ஈடுபட ஆரம்பித்தனர்.

எழுச்சியுறும் சிங்கள வர்த்தக முதலாளித்துவம் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்களூடாக தமது வர்க்க நலன்களை முதன்மைப்படுத்த முனைந்த ஆரம்ப காலகட்டத்திலிருந்தே, சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் சுத்தோலிக்க விரோத, முஸ்லிம் விரோத, இந்திய விரோதக் குணும்சங்களை அடையாளம் காணுதல் முடியும்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியர்களுடனும் முஸ்லிம்களுடனும் வர்த்தக நலன்களுக்காகப் போட்டியிட்ட சிங்கள வர்த்தக முதலாளித்துவத்தின் சமய, கலாசார அணியின் பிதாவான அநகாரிக தர்மபால (Anagarika Dharmapala) அவர்கள், 1880களில் இருந்தே தனது பேச்சுகளிலும் எழுத்துகளிலும் இந்திய விரோத, முஸ்லிம் விரோதப் போக்கை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இக் காலக்கட்டங்களில், கொழும்பு மாநகரின் வளர்ச்சியுடன் கூடவே உருவாகி வந்த யாழ்ப்பாணத்து மேலோர்களதும் வர்த்தக முதலாளிகளினதும் ஆழம், தம்மை ஒத்த வர்க்க குணும்சங்களைக் கொண்டிருந்த சிங்கள பௌத்த தலைமையுடன் இணைந்து முஸ்லிம்களையும், இந்தியத் தமிழர்களையும் காட்டிக் கொடுத்தேனும் தமது அபிலாஷைகளை நிறைவு செய்யும் நோக்கங்களை, வெளிப்படுத்தி வந்தது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந் நூற்றாண்டின் ஆரம்பத்திலுமாக அமைந்த இலங்கைத் தேசியவாதத்தின் தொடக்கக் கட்டத்திலேயே, இலங்கை வர்த்தக முதலாளித்துவத்தின் இன ரீதியான உள் போட்டிகள் சுதேசிய அரசியலில் புலப்படத் தொடங்கின.

இக் காலக்கட்டத்தில் கொழும்பு, கண்டி நகர்களில் கூர்மையடைந்து வந்த முஸ்லிம் விரோத உணர்வும், அதன் வெளிப்பாடான 1915ம் ஆண்டின் சிங்கள—முஸ்லிம் கலவரமும், இப் பின்னணியிலேயே புரிந்துகொள்ளப் படுதல் வேண்டும்.

சுதந்திரத்தின் பின்னர் மலையகத் தமிழர் மீதும், இலங்கைத் தமிழர் மீதும் தொடர்ச்சியாக இடம்பெற்ற இனவாத நடவடிக்கைகளில் காணப்பட்டது போலவே சிங்கள பௌத்த வர்த்



படிப்பகம்

www.padippakam.com

தக முதலாளித்துவமும், அதன் அரசியல் வெளிப்பாடான சிங் களத் தேசியவாதமும், 1915ம் ஆண்டு முஸ்லிம் கலவரத்தின் பின்னணியிலும் தலைமைப் பாத்திரம் வகித்தன.

இக் கலவரத்தின்போது கொழும்பில் மையப்பட்ட யாழ்ப் பாணத்து மேலோர் குழுவினதும், வர்த்தகர்களினதும் கைகளில் இருந்த இலங்கைத் தமிழர் தலைமை, முஸ்லிம் மக்களது நலன்க ளுக்கு விரோதமாகச் சிங்கள பௌத்த தேசியவாதிகளிடம் தமது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தி, தமிழ் பேசும் முஸ் லிம் மக்களைத் துரோகத்தனமாகக், காட்டிக் கொடுத்தது.

இக் காட்டிக்கொடுப்புக்களின் பெறுபேறுகவே, சிங்களத் தலைவர்களால் கொழும்பு மாநகர வீதிகளில், தேரினில் ஊர்வல மாக இழுத்துச் செல்லப்பட்டார் என நாம் இன்று பீற்றிக் கொள்ளும் வரலாற்றுப் பெருமையை, தமிழர் தலைவரான சேர். பொன். இராமநாதன் துரை அவர்கள் பெறக்கூடியதாக இருந் தது!

முஸ்லிம் மக்களது தலைமை, கொழும்பு சார் வர்த்தக முத லாளித்துவத்தின் குறுகிய நலன்களை முதன்மைப்படுத்தும் போக்கைக் கொண்டதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது. கொழும்பில் நிகழ்ந்த பொருளாதார வாய்ப்புகளுக்கான தமிழ் முஸ்லிம் வர்த்தகக் முதலாளித்துவப் போட்டிகளும், அதன் அரசிய லும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிளவுகளை, இந் நூற்றுண்டின் ஆரம்பக் காலங்களிலேயே வலுவடையச் செய்தது.

பின்னர், இன அரசியலில் தமிழர் விரோதப் போக்கை சிங்கள பௌத்த அரசுகள் மேற்கொண்டபோது, முஸ்லிம் தலை மையின் ஒரு பகுதி, முன்னர் தமிழரது கொழும்புசார் தலைமை விளையாடிய சூதான அரசியல் விளையாட்டைத் தாமும் விளையா டத் தொடங்கியது.

தமிழர்களின் முதலாளித்துவத் தலைமையும், சிங்களவரின் முதலாளித்துவத் தலைமையும், 1950 களில் கிராமங்கள் சார்ந்து பரவலாகியதில் தம்முள் பிளவுபட்டன. முஸ்லிம்களது முதலா ளித்துவத் தலைமைகள் கொழும்பில் மையப்பட்டே இருந்ததினுல் இக் காலகட்டத்தில், அடிப்படை அரசியற் பிளவுகளுக்கு ஆளாகவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லிம்களின் தலைமை தமது சொந்த மக்களின் பலத்தில் தம்மை ஸ்தாபித்துக் கொள்வதற்குப் பதிலாக, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி எனப் பிளவுபட்ட சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் கட்சிகளின் பின் செல்வதன் மூலம், தமது சொந்த நலன்களைப் பேண முற்பட்டது.

1915ம் ஆண்டில் தமிழர் தலைமை முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்ததைப் போல, 1948-லும் சொந்த நலன்களுக்காகக் கொழும்பில் மையப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இந்தியத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தமையால் உடைவுபட்டதில் தமிழரசுக் கட்சி உருவாகியது.

சிங்களப் பேரினவாதத்துக்கும், தமிழரது பிரதேசங்களில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களுக்கும் எதிரான பரவலான தமிழ் மக்களது அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழரசுக் கட்சி கிழக்கு மாகாணத்து முஸ்லிம்மக்களது ஆதரவைப் பெற்று, தமிழ் பேசும் மக்களது ஐக்கியத்தைப் பேண முயற்சிகள் எடுத்தது. எனினும், தமிழர்—முஸ்லிம்கள் மத்தியில் நிலவிவரும் பிளவுகளை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் புரிந்துகொள்ளும் அறிவாற்றலும், வரலாற்று ரீதியான பிளவுகளைக் குறுகிய தமிழ்த் தேசியவாத நலன்களுக்கு விரோதமாகச் சென்று தீர்த்து வைக்கும் அர்ப்பணிப்பும், தமிழரசாரிடம் காணப்படவில்லை.

ஏனைய சமூகங்களுக் கெதிராக, சிங்களத் தேசியவாதிகளுக்கும் அவர்களது அரசுகளுக்கும் துணைபோகும் சூதாட்டத்தை அரசியல் தந்திரோபாயமாகக் (Political Tactics) கொள்ளும் தற்கொலைப் போக்கை, சுதந்திரத்தின் பின்னர் தமிழர் தலைமைகளிடமிருந்து முஸ்லிம் தலைமைகள், சுவீகரித்துக் கொண்டன.

முஸ்லிம் தலைவர்கள் கொழும்புக்குவெளியில் தமது பாரம்பரியக் கிராமங்களிலும், பிரதேசங்களிலும் வாழும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பரவலாகி, பரந்துபட்ட முஸ்லிம்மக்களது நலன்களுக்குப் பொறுப்பாக இயங்காதமையால் தமது சொந்த நலன்களுக்காகப் பரந்துபட்ட முஸ்லிம் மக்களது சமூக பிரதேச நலன்களைச் சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளுக்குப் பலியிடும் அளவுக்குத் துணியவும், தாழ்ந்துபோகவும் கூடியவர்களாக அமைந்தனர்.

1949ல் தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையிலான ஐக்கியத்தைக்



படிப்பகம்

www.padippakam.com

கட்டி எழுப்புவதற்கான மேல்மட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

மேற்படி ஐக்கியத்துக்கான முயற்சிகள் வெற்றி பெற்றிருக் குமேயானால், கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கணக்கான சதுர மைல் பரப்புள்ள முஸ்லிம் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களை, மாறிமாறிப் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி—சிறீலங்கா சுதந் திரக் கட்சி அரசுகளின் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைக ளில் இருந்து பாதுகாத்திருத்தல் சாத்தியப்பட்டிருக்கலாம்.

தமிழரசுக் கட்சியின் நியமனம் பெற்றோ அல்லது ஆதரவு பெற்றோ, நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்ற கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்கள் பலரும், பின்னர் அவ்வப்போது ஆளும் கட்சிகளாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ தாவத் தொடங்கினர்.

இத்தகைய ஆளும் கட்சித் தாவுதல்களுக்குத் தரகர் வேலை செய்து, தமது நலன்களைப் பாதுகாத்துக் கொண்டது கொழும்பு சார் முஸ்லிம் வர்த்தக முதலாளித்துவம்.

மத்தியதர வர்க்கத்தின் கணிசமான வளர்ச்சியோ, ஆலைத் தொழிலாளர்களின் உருவாக்கமோ அற்றிருந்த கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களது சமூக, பொருளாதாரப் பின்னணியில், விரல் விட்டு எண்ணக்கூடிய பெருநில உடைமையாளர்களது மத்தியில் இருந்து உருவான கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமை, தன்னிச் சைப்படி—எதிர்விமர்சனங்களின்றி கட்சித் தாவல்களில் ஈடுபடக் கூடியததாக இருந்தமை, ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல.

இவர்களது கட்சித் தாவல்களுக்குத் தரகுவேலை செய்யவும், சித்தாந்த ரீதியான நியாயப்படுத்தல்களை முன்வைக்கவும் கொழும்புசார் முஸ்லிம்களின் வர்த்தக முதலாளித்துவமும், அவர் களுக்குச் சேவைசெய்த கல்விமான்களும் எப்போதும் தயாராகவே இருந்தனர்.

மேற்படி நிலைமைகளை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தறிந்து தமிழர்களதும், முஸ்லிம் மக்களதும் ஐக்கியத்துக்கான நடைமுறை களை வகுத்துக் கொள்ளும் அரசியல் ஞானமோ, அர்ப்பணிப்போ அற்றிருந்த தமிழரசுக் கட்சியும் தனது வர்க்கக் குணுங்சங்களுக்கு அமைய, முஸ்லிம் மக்கள் அரசியலில் நம்பத் தகுந்தவர்கள் அல்ல என்ற அவநம்பிக்கையையும், இதன் அடிப்படையில் எழுந்த முஸ்லிம் விரோதப் போக்கையும் வெளிப்படுத்தியது.



படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் இப்போக்கு 1960-ம் ஆண்டில், தமிழ்பேசும் மக்கள் வெகுஜன அடிப்படையில் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசு, இராணுவத்தை அனுப்பி காட்டுமிராண்டித்தனமாக முறியடித்த பின்னர் நிலவிய அவநம்பிக்கை நிறைந்த சூழலில், முதன்மை பெறத் தொடங்கியது.

1960 ஏப்பிரல் 17ம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் அரச பயங்கரவாதத்தால் தமிழ்பேசும் மக்களது சத்தியாக்கிரகப் போராட்டம் முறியடிக்கப்பட்டது.

''பிறந்துவிட்ட மனிதன் இறப்பது ஒருமுறைதான். அதை நம் இனத்தின் எழுச்சிக்குப் பயன்படும் வழியில் பயன்படுத்துவதே நாம் இனத்துக்குப் புரியும் சிறந்த பணி'' (தடுப்புக் காவலில் நாம் — புதுமைலோலன்) என எழுதியும் பேசியும் வந்த மன்னார் எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த கே. எஸ். ஏ. கபூர், தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கிகளுள் ஒருவராக அமைந்த கல்முனை மசூர் மௌலானா என்பவர்கள் கைதாகி பனாகொடை முகாமில் தமிழரசுத் தலைவர்களுடன் சிறையிடப்பட்டிருந்தனர். இருந்தும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழரசுக்கட்சியின் கல்முனை நாடாளுமன்ற உறுப்பினர் எம். சி. அகமட் 13 - 7 - 1961ல் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசுடன் சேர்ந்து கொண்டமையே, தமிழரசாருக்கு முக்கியமானதாகத் தெரிந்தது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் வடமாகாணத்திலும் சரி, கிழக்கு மாகாணத்திலும் சரி மனப்பூர்வமாகப் பங்குபற்றிய சாதாரண முஸ்லிம் மக்களையோ பனாகொடை இராணுவச் சிறைக்குத் தம்முடன் கைதிகளாகத் தொடர்ந்து வந்த முஸ்லிம்களையோ முதன்மைப்படுத்துவதற்குப் பதிலாக, இப்பிரதேசங்களின் பூர்ஷுவா முஸ்லிம் தலைமைகளின் போக்கையே தமிழரசுக் கட்சியின் அன்றைய குட்டி பூர்ஷுவா, பூர்ஷுவாத் தலைவர்கள் கருத்திற் கொண்டனர்.

இந்த அவநம்பிக்கை நிறைந்த காலக்கட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்ட கொழும்புசார் தமிழ் வர்த்தகமுதலாளிகளும், அவர்களுக்குச் சேவை செய்யும் கற்றறிந்த தமிழ் மேலோர்களும் தமிழரசுக்கட்சியின் தலைமையைத், தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இத்தகைய சீரழிவிற்கு ஆட்பட்ட தமிழரசுக் கட்சியின் கண்களில் கொழும்பு வாழ் முஸ்லிம்களின் வர்த்தக முதலா



படிப்பகம்

www.padippakam.com

ளித்துவத் தலைமையும், அதன் கல்விமான்களும் பேரினவாத சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கிய ஆதரவே, பொருட்டாகத் தெரிந்தது.

இப்படியாக தமிழ் முஸ்லிம் உயர்வர்க்கங்களது போட்டிகளும் பூசல்களும், சர்தாரண தமிழர்களதும், முஸ்லிம்களதும் தலைகளில் சுமத்தப்பட்டன.

'முஸ்லிம்களை அரசியலில் நம்பமுடியாது' என்ற கருத்து தமிழர்களிடையிலும், 'தமிழர்களை அரசியலில் நம்ப முடியாது' என்ற கருத்து முஸ்லிம்களிடத்திலும் பரவலாகிய காலகட்டமும் இதுவேயாகும்.

இதன்பின்னர், தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழரசுக் கட்சியை அடியொற்றிவந்த ஏனைய இயக்கங்களோ, தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்திலேயோ தமிழ் பேசும் மக்களுக்கான பொதுத் தலைமையைக் கட்டி எழுப்புவதிலேயோ குறிப்பிடத்தக்க கரிசனையைக் காட்டவில்லை.

1956ல் இடம்பெற்ற நாடளுமன்ற தேர்தலில் கல்முனை, பொத்துவில் தொகுதிகளில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களான எம். எஸ். காரியப்பரும், எம். எம். முஸ்தபாவும், வெற்றி பெற்றனர். 1960ல் கல்முனைத் தொகுதியில் எம். சி. அகமதுவும், 1965ல் மூதூர் தொகுதியில் எம். ஈ. எச். முகமட் அலியும் தமிழரசு வேட்பாளர்களாக வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றதன் பின்னர் தமிழரசுக்கட்சியில் இருந்து விலகிய இவர்கள், துரதிஷ்டவசமாக சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுடன் சேர்ந்து கொண்டனர். இதனல் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுக்கு கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் சிங்கள பௌத்தக் குடியேற்றங்களை நிறுவுவது இலகுவாகியது. எனினும் 1965ல் தமிழரசுக்கட்சி ஐ. தே. க. அரசுடன் சேர்ந்து கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு இதே துரோகத்தைச் செய்தது என்பதையும்; முஸ்லிம் தலைவர்கள் மட்டுமல்ல பல்வேறு தமிழ்த் தலைவர்களும் தமிரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றி பெற்றபின் மேற்படி கட்சிகளில் இருந்து விலகி, சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுடன் சேர்ந்துள்ளனர் என்பதையும், நாம் மறந்து விடுதல் இயலாது.

'இன்று முஸ்லிம் மக்களது பல்வேறு பிரதேசங்களிலும், பாரம்பரியக் கிராமங்களிலும் கல்வியும், மத்தியதரவர்க்கமும் பரவலாகி வளர்ச்சியடைந்து வருகிற ஒரு காலகட்டமாக, அமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கும், அதனிடம் சரணு கதி அடைந்துள்ள கொழும்புசார் முஸ்லிம் தலைமைகளதும் அரசியல் வஞ்சனைகளுக்கு எதிராக பரந்துபட்ட முஸ்லிம் மக்களது குரல், குறிப்பாக இளைஞர்களது குரல், இலங்கைத்தீவின் நாலா புறத்திலிருந்தும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்தைப் பலமான ஓர் அத்திவாரத்தில் கட்டி எழுப்புவதற்கு, முன்னர் எப்போதும் காணப்படாத வாய்ப்புகள் நிறைந்த ஒரு வரலாற்றுக் காலகட்டமாகவும், இன்றைய காலகட்டம் அமைகின்றது.

இத்தகையதொரு தருணத்தில் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகள் எமது வரலாற்றில் அறவே இல்லாமல் போய்விடவில்லை, என்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிரான கிளர்ச்சியும் இன உணர்வும் ஓங்கியிருந்த 1955ம் ஆண்டில், யாழ்ப்பாண நகர பிதாவாக ஒரு முஸ்லிம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்: 7 - 1 - 1955ல் நகரபிதாவாகத் தெரிவு செய்யப்பட்ட காதி. எம். எம். சுல்தான் ''நான் மதத்தில் முஸ்லிமாயிருப்பினும் இனத்தில் தமிழன்'' (ஈழகேசரி, 9 - 1 - 1955) எனஅறிக்கை வெளியிட்டார்.

இவரது வெற்றிக்கு தமிழ்த் தேசியவாதிகளும், மு. கார்த்திகேசன் தலைமையில் இடதுசாரிகளும், ஈழகேசரி பத்திரிகை ஸ்தாபனத்தினரும் ஐக்கியப்பட்டு உழைத்தனர் என்பதுவும் மகிழ்ச்சியுடன் நினைவு கூரத்தக்க, வரலாற்றின் உதாரணமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# 2

# முஸ்லிம் மக்களின் சமூக வரலாறு, மொழி தொடர்பான சர்ச்சைகளும்: அதன் அரசியலும்

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான உறவுகள் தமிழகத்தில் காணப்படுவது போல, ஒரே தேசிய இன உறவாகப் பரிணமிக்கவில்லை. இதற்குக் காரணமான புவியியல், அரசியல், வரலாற்றுக் காரணங்கள் யா்வை? அனைத்துத் தமிழ் பேசும் மக்களதும் விடுதலைக்கான போராட்டத்தை இணைப்பது தொடர்பாக, இத்தகைய பிளவுகள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் எவை? புதிய சமூக, பொருளாதார நிலைமைகளினால் தமிழ். முஸ்லிம் மக்களது வர்க்க அமைப்பில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் தொடர்பாக, இப்பிளவுகள் சுருங்கி வருகின்றனவா? அப்படியாயின் புதிய நிலைமைகளைச் சாதகமாக்கித் தமிழ் பேசும் மக்களது ஐக்கியத்தை எப்படிக் கட்டிஎழுப்பலாம்?

தமிழ்பேசும் மக்களது சமூக அரசியல் பொருளாதார வரலாற்றை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தும், அவற்றின் இயங்கியல் போக்குகளை அடையாளம் கண்டும் இத்தகைய வினாக்கள் பலவற்றிற்கு விடைகாண வேண்டியது. தமிழ்பேசும் மக்களது போராட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தை மக்கள் போராட்டமாக்குவது தொடர்பாகவும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும், முக்கியமானதொரு பணியாகும்.

தமிழ் மக்களைப் போலன்றி முஸ்லிம் மக்களில் 60 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தமிழ் பேசும் மக்களது மாநிலத்துக்கு வெளியில், சிதறிய அடிப்படையில் வாழ்ந்து வருவது தொடர்பாகவும்; அரசியல் வரலாற்றுப் போக்கில் கொழும்புசார். தமிழ், முஸ்லிம் வர்த்தக முதலாளித்துவத் தலைமைகள் தமது நலன்களுக்கான போட்டிகளையும் பூசல்களையும் அரசியல்படுத்தியும். சித்தாந்தப்படுத்தியும், சாதாரண தமிழ் பேசும் மக்களது தலைகளில் எப்படிச் சுமத்தினார்கள் என்பது பற்றியும், ஏற்கனவே கண்டோம்.

வரலாறு தொடர்பான வேறொரு சிக்கலையும், அதன் பின்னணியையும் தொடர்ந்து ஆராய்வது பொருத்தமானதாகும்.

## தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் இனவரலாறு தொடர்பான சர்ச்சைகள்

இலங்கையடங்கிலும் தமிழ் பேசும் மாநிலத்திலும் சரி, சிங்கள மாநிலத்திலும் சரி. இலங்கைச் சோனகர்கள் என அழைக்கப்படும் முஸ்லிம் மக்களின் அடிப்படைப் பிரிவினர், தமிழையே தமது தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

எனினும் 1950களில் முஸ்லிம் மக்களது தாய்மொழி பற்றிய சர்ச்சை முதன்மை பெற்றிருந்தது. ஆங்கிலம் அல்லது சிங்களம் முஸ்லிம் மக்களது தாய்மொழியாக வேண்டும் என்ற குரல், கொழும்புசார் மேல்வர்க்க முஸ்லிம்கள் சிலரிடையில் இருந்து எழுந்தது.

தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்துவது உயர்வர்க்க முஸ்லிம் தலைமைகளைப் பொறுத்தும், தமிழ்த் தலைமைகளைப் பொறுத்தும், மக்களைத் தமது அரசியல் பகடைக்காய்களாக்குவது தொடர்பாகவும் அவசியமான ஒன்றாக, இருந்து வந்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ்பேசும் மக்களிடையிலான பிளவுகளைப் பெரிதுபடுத்தி அரசியல் லாபந்தேடுவதில் கைதேர்ந்தவையாக இருந்து வருவதை, நாம் அறிவோம். தமிழர் விரோத இனவெறியைச் சீர்திருத்தக் கருத்துக்களுடன் கலந்து



படிப்பகம்

www.padippakam.com

சாதாரண சிங்கள வெகுஜன மட்டத்துக்கு எடுத்துச் சென்று ஆழமாகவும், பரவலாகவும் ஸ்தாபித்த சிங்கள பௌத்த பேரின வாதியும் சீர்திருத்தவாதியுமான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா குழுவினர், சிங்களத்தை முஸ்லிம் மக்களது கல்வி மொழியாக்குவதில் ஆர்வம் காட்டினார்கள். இச் சதிபற்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முஸ்லிம் கல்விமானும், ஆய்வாளருமான கே. எம். எச். காலிதீன் 1981 - ம் ஆண்டு யாழ்பிறை சஞ்சிகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'முஸ்லிம் சமூகத்தைத் தமிழ்ச் சமூகத்திலிருந்து முற்றாகப் பிரிக்கும் திட்டம் ஒன்றைத் திரு பண்டாரநாயக்கா குழுவினர் ஏற்படுத்தியதை, இவர் (கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்) ஏற்றுக் கொள்ளவில்லை.

பல நூற்றாண்டுகளாக தமிழ்மொழியுடன் பின்னிப் பிணைந்திருக்கும் முஸ்லிம் மக்களது தலைவிதியை வெறும் ஆட்சிகளினாலோ, தீர்மானங்களினாலோ, சட்ட ஏற்பாடுகளினாலோ, அரசியல் சட்ட ஏற்பாடுகளால் மட்டுமோ மாற்றிவிடுதல் என்பது சாத்தியப் படக்கூடியதல்ல என்பதை, வரலாறு நிரூபித்தது.

தேசியக் கட்சி முகமூடி போட்டுக் கொண்ட, பௌத்த சிங்களக் கட்சிகளின் அங்கத்தவர்களாக இருந்த முஸ்லிம் கல்விமான்கள் பலரே, முஸ்லிம் மக்களது தாய்மொழி தமிழ் என, மொழிந்தனர்.

இச் சர்ச்சை குடுபிடித்திருந்த 1956-ம் ஆண்டில், ஐக்கிய தேசியக் கட்சி மேலவை உறுப்பினராயிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமான் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள், தனது உரையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''நாடு முழுவதிலும் முஸ்லிம் மக்களின் போதனாமொழியாகத் தமிழும் அங்கீகரிக்கப்படல் வேண்டும். ஏனெனில் தமிழ்பேசும் முஸ்லிம்கள் இந்நாடு முழுவதும் பரந்துவாழ்கின்றனர்.. .'' பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர், ''எமது சமுதாயம் இரண்டாகப் பிரிக்கப்படுவதையிட்டு எந்த ஒரு முஸ்லிமும் சிந்திக்கமுடியாது. ஒரு பிரிவினர் தொடர்ந்து தமிழைத் தாய்மொழியாகவும், பிறிதொரு பிரினர் வேற்றுமொழி ஒன்றைத் தாய் மொழியாகவும் கொள்ள முடியாது. ஆகையால் இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாக தமிழே தொடர்ந்து இருக்க வேண்டும்'' என வலியுறுத்துகிறார்.

இன்று முஸ்லிம்களது தாய்மொழி தமிழ் என்ற கருத்து பெரும்பாலும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. எனினும், இச் சர்ச்சைக்கு வழிவகுத்த அடிப்படைக் கருத்து



படிப்பகம்

www.padippakam.com

இன்னமும் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இலங்கை முஸ்லிம்கள் அராபியர்களின் வழிவந்தவர்கள் என்பதே மேற்படி சர்ச்சைக்கு இடம்வைத்த கருத்தாகும்.

இலங்கையிலும் சரி, ஏனைய தென்னாசிய நாடுகளிலும் சரி வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பாக, வரலாற்று ரீதியான அராபியரது செல்வாக்கை யாரும் மறுத்தல் இயலாது. இதன் காரணமாக தென்னாசிய முஸ்லிம்கள் யாவரும் அராபியரின் வம்சா வழியினர் எனக் கருதப்படவில்லை.

இலங்கையின் தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் மத்தியில் தாங்கள் அராபியரின் வம்சாவழியினர் என்ற கருத்து பிரபலமாகியுள்ளது. இக் கருத்து முஸ்லிம் மக்களால் இடையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மொழி தமிழ் என்ற கருத்துக்கு இடமளிக்கிறது. 1950களில் சுயபாஷைக் கல்வி மக்கள் மட்டத்தில் பரவலாகி வந்த காலக்கட்டத்தில் முஸ்லிம் மக்களது தாய்மொழி (கல்வி மொழி) தொடர்பான சர்ச்சைகளுக்கு, மேற்படி கருத்தும் அடிப்படைக் காரணமாயிற்று.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்குக் கிழக்கு மாகாணங்களிலோ, புத்தளம் மாவட்டத்தின் வடக்கு கரையோரங்களிலோ, அல்லது ஏனைய சிங்கள மாநிலத்திலோ வாழும் முஸ்லிம் மக்கள், வரலாறு அறிந்த காலம் தொட்டு தமிழ்பேசும் மக்களாகவே உள்ளனர். இவர்கள் அரபு மக்களின் வம்சாவழியினராக இருந்திருப்பின், அரபு மொழியைப் பேசியிருப்பர்: அல்லது தமிழ்ப் பகுதிகளில் தமிழையும், சிங்களப் பகுதிகளில் சிங்களத்தையும் பேசும் மொழியாகச் சேர்த்துக் கொண்டிருப்பர். இவ்வண்ணமின்றி, இலங்கைத் தீவடங்கிலும் முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியைப் பேசுவதை, ஒரு தற்செயலான அதிசயம் போல விளக்க முனைவதோ, அல்லது தென்னிந்திய மார்க்க அறிஞர்கள் தொடர்பினால் தமிழ்த் தொடர்பு ஏற்பட்டது என்று குறிப்பிடுவதோ, போதியதும் விஞ்ஞானபூர்வமானதுமான விளக்கமாகாது.

இக் கருத்துப் பலம் பெறுவதில் பங்களிப்பு செய்த முஸ்லிம் கல்விமான்கள் யாவரும், அறபி பாஷா எனப் புகழ்பெற்ற அஷ்மது ஒறுபி அல்மிஸ்ரி என்ற எகிப்திய விடுதலைப் போராளியின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாவர்.

எகிப்திய மன்னருக்கெதிராக இவர் தலைமைதாங்கிய 1882ம் ஆண்டுக் கிளர்ச்சியின் தோல்வி காரணமாக, 1883 ஜனவரி 11ல்



படிப்பகம்

www.padippakam.com

எகிப்தில் இருந்து நாடுகடத்தப்பட்டுக் கொழும்பு வந்த அரபிய ரான இவர், இலங்கை முஸ்லிம் தலைவர்களின் 'வீர வரவேற்பைப்' பெற்றார்.

முஸ்லிம் கல்விமானாகிய ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களது கூற்றுப்படி ''கொழும்பில் அறபிபாஷா ஒரு கைதியாக வந்திறங்கியபோது, இலங்கை முஸ்லிம்கள் அவருக்கு ராஜோபசார வரவேற்பளித்தனர். அன்று முதல் 1901ம் ஆண்டு அவர் இலங்கையை விட்டுப் போகும் வரை, கொழும்பு முஸ்லிம் சமூகத்தினரிடையிலும், பின்னர் கண்டி முஸ்லிம் சமூகத்தினரிடையிலும் அவர் மதிப்புக்குரியவராக கணிக்கப்பட்டு வந்தார். காற்சட்டையோடு துருக்கித் தொப்பியணிவதை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர், இவர்தான். இலங்கை முஸ்லிம்கள் இதனை இன்றும் பின்பற்றுகின்றனர்.''

இலங்கை முஸ்லிம்களிடை நவீன கல்வி மரபு, கலாசார வளர்ச்சி சம்பந்தமாக முன்நின்றுழைத்தவரும், முஸ்லிம் பத்திரிகைத் துறையின் தந்தையுமாகிய எம். சி. சித்திலெப்பை அவர்களது முயற்சிகள் பலவற்றிலும் செல்வாக்குமிக்க உறுதுணையாகியவர், எகிப்தை சேர்ந்த அரபியரான இந்த ''அறபி பாஷா'' இலங்கை முஸ்லிம் அறிவுலகத்தின் இத்தகைய தோற்றுவாயினுக்கும், இலங்கை முஸ்லிம்களை அராபியருடன் அவர்களது வம்சாவழியினராக இணைத்துப் பார்க்கும் கருத்துப் போக்கிற்குமிடையில், தொடர்புகள் உண்டு என்பது எனது கருத்தாகும்.

மேற்படி கருத்து வரலாற்று ரீதியாக முஸ்லிம் மக்கள் எய்தியிருக்கும் தனித்துவத்தையோ இனப்பிரிவு அடையாளத்தையோ நிராகரிக்கும் நோக்கத்துடன், இங்கு முன்வைக்கப்படவில்லை. இலங்கைத் தமிழரும், முஸ்லிம் மக்களும், மலையகத் தமிழரும் தமிழ் பேசும் மக்கள் என ஒருமைப்பட்டு வளர்ச்சி பெறுவது தொடர்பான சிக்கல்களை விடுவிப்பதே எனது நோக்கமாகும்.

இங்கு நான் ஆராய்ச்சிக்கு முன்வைக்கும் கருத்து, இலங்கையின் அடிப்படை முஸ்லிம் மக்கள் தொகுதியினர் தென் இந்தியாவில் — குறிப்பாக நாகபட்டினம், அதிராம் பட்டினம், காயல் பட்டினம், கீழக்கரை போன்ற பகுதிகளில் இருந்து இலங்கைக்குப் குடிபெயர்ந்த தமிழ்நாட்டு முஸ்லிம்களின் வம்சாவழியினர் என்ற கருத்தாகும்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இருந்துவந்துள்ள பலமான அராபியச் செல்வாக்கை நான் மறுக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை முஸ்லிம்களின் அடிப்படைத் தொகுதி தமிழ்நாட்டு முஸ்லிம்கள் என்பதற்கு, இலங்கை முழுவதும் அவர்கள் தமிழ் பேசுவதையும், ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து மரணம் வரை பல்வேறு நிலைகளிலும், தமிழ் மக்களது கலாசாரத்தினதும் சடங்குகளதும் மிச்ச சொச்சங்கள், முஸ்லிம் மக்களிடை மறைந்து செல்லும் போக்கில் நிலவி வருவதையும், முக்கிய ஆதாரங்களாகக் கொள்கின்றேன்.

பல்வேறு பகுதிகளில், தமிழர்களின் மத்தியில் நிலவும் சாதி அமைப்பின் சில மிச்சசொச்சங்கள் முஸ்லிம் மக்களிடை காணப் பட்டு வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் முக்குவரிடையிலும், முஸ்லிம் மக்களிடையிலும் தாய்வழி 'வயிற்று வார்' குடி அமைப்பு (Matri liniage) காணப்படுகிறது. இதில் ஆர்வம் தரும் ஒரு விடயம் 'படையாண்ட குடி' போன்ற சில குடிகள் கிழக்கு மாகாணத்து முஸ்லிம்களிடையிலும், முக்குவர் சமூகத்தைச் சேர்ந்த தமிழரிடையிலும் பொதுவாகக் காணப்படுவதாகும்.

புத்தளம், கற்பிட்டிப் பகுதிகளில் வாழும் சில முஸ்லிம்களை முக்குவ முஸ்லிம்கள் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்துள்ளது.

தமிழரது சாதி அமைப்பின் மிச்ச சொச்சங்கள், சடங்குச் கலாசாரத்தின் மிச்ச சொச்சங்கள் என்பவற்றுடன், இலங்கை முழுவதும் தனித்த தொலை தூர சிங்களப் பகுதிகளில் கூட முஸ் லிம்கள் தமிழ் பேசுபவர்களாக இருப்பதையும் ஒப்பிட்டு நோக் கும் சமூகவியலாளன் ஒருவன், இலங்கை முஸ்லிம் மக்களது அடிப்படைச் சமூகத் தொகுதி, தமிழ்நாட்டு முஸ்லிம்களின் வழித் தோன்றல்கள் என்ற முடிவுக்கு வருதல் கூடும்.

மேலும் இவற்றுடன், பெரும்பாலான முஸ்லிம் கிராமங்க ளுடைய தென் இந்திய தொடர்புகள் பற்றிய தகவல்களையும், ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும்.

இலங்கையின் தென் பகுதியில் தனித்த முஸ்லிம் கிராமமான திக்குவல்லைக் கிராமத்திலேயே தமிழ் நாட்டு முஸ்லிம் கிராமமான கீழக்கரையின் செல்வாக்குத் துல்லியமாக உள்ளதை, இங்கு உதா ரணப்படுத்தலாம்.

தமிழ் பேசும் மக்களுள் முஸ்லிம் மக்களைப் பொறுத்தும், இந்தியத் தமிழர்களை பொறுத்தும் தலையாய பிரச்சினை தமிழ் பேசும் மாநிலத்திற்கு வெளியே, அவர்களது தொகை ரீதியான அடிப்படை மக்கள் பிரிவினர் வாழ்வதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

கடந்த காலத்துத் தமிழ்பேசும் மக்களது பொதுவான அரசியல் வரலாறும், சிறப்பாக முஸ்லிம் மக்களது அரசியல் வரலாறும் இனியேனும், அவர்கள் தமது அரசியல் சமூக பொருளாதார சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் தமது பாரம்பரியப் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டே அமைத்துக் கொள்ளுதல் அவசியம் என்ற பாடத்தைக் கற்றுத்தந்திருக்கிறது. அல்லாத பட்சத்தில், குறிப்பாக முஸ்லிம் மக்கள் தமது அடிப்படைப் பிரதேசங்களையும் இழந்து — ஏனைய பகுதிகளில் தமது நலன்களையும் இழந்து குரங்கிடம் அப்பம் பகிரக் கொடுத்த பூனைகள் போலத் தாழ்ந்துபோக நேரிடும்.

இதுகாறும் கொழும்பு மேலோரின் நலன்களுக்காகவும், இலங்கை முழுவதிலும் முஸ்லிம் மக்கள் பரந்து வாழ்கின்றனர் என்ற காரணத்துக்காகவும், தமது பாரம்பரியப் பிரதேசங்களைத் தொடர்ந்தும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அபிலாசைகளுக்குமாகத் தத்தம் செய்துதர அம்பாறை போன்ற முஸ்லிம் பாரம்பரியப் பிரதேசங்களில் வாழும் இளைய தலைமுறையினரும், மக்களும் தயாரில்லை என்பதை, அண்மைக்கால முஸ்லிம் அரசியற்போக்குகள் துலாம்பரமாகக் காட்டிவருகின்றன. இது தொடர்பாக இளம் ஆராய்ச்சியாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளருமான எம். வை. எம். சித்திக் தனது புகழ்பெற்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் நிலப் பிரச்சினைகளும், குடியேற்றப் பிரச்சினைகளும் என்ற கட்டுரையில் தெரிவிக்கும் கருத்துகள், மனம் கொள்ளத் தக்கனவாகும்.

தமிழ் பேசும் மாநிலத்து முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பது குறித்தும், சிங்கள மாநிலத்தில் குறிப்பாக நிலப்பசிமிக்க ஈரவலயத்தில், தமது பாரம்பரியக் கிராமங்களிலும் நகர வட்டாரங்களிலும் வாழும் முஸ்லிம் மக்கள், அவற்றின் எல்லைகளை வரையறுத்து அரசினதும், அரசு ஆதரவு பெற்ற நிலப்பசி மிகுந்த ஈரவலயச் சிங்களவர்களது ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக அவற்றைப் பாதுகாப்பது குறித்தும், அணி திரளவேண்டும் என்பதும்; இதனை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தமது தலைமையைக் கட்டி எழுப்புதல் வேண்டும் என்பதும் இன்று காலத்தின் தேவையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## கிழக்கு மாகாணமும், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் பற்றிப் பார்த்தசாரதி ஒழுங்கு செய்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடையே, ஒரு முஸ்லி மாவது இல்லை. தமிழ் பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசங் களான வடக்குக் கிழக்கு மாகாணங்கள். தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் இந்த மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களதும், பாரம்பரியப் பிரதேசமாகும்.

முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கிய நிலையில் மட்டுமே, கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் உரிமை கொண்டாடுவது சாத் தியமாகும். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த அம் பாறை, திருகோணமலை மாவட்டப் பிரதேசங்களில் இதுவே உண்மை நிலைமையுமாகும்

ஒடுக்கும் எதிரிகளின் அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கும் ஒரு முக்கிய விடயம் தொடர்பாக, தமிழர் தலைமை அடிப்படைப் பிரச்னையே இல்லாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாயிற்று? கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் எதிர்காலம் தொடர்பாக முன்னாள் மூதூர் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. அப்துல் மஜீத் பயனுள்ள பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் மக்களது ஐக்கியமான எதிர்காலத்தில் ஆர்வமுள்ள யாவ ரும் இத்தகைய கருத்துக்களில் அக்கறை செலுத்துவது அவசிய மாகும்.

உண்மையில் கிழக்கு மாகாணம், புத்தளம், மன்னார்ப் பிரதே சங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக் காத எந்த ஓர் இயக்கமும், தம்மை அனைத்துத் தமிழ் பேசும் மாநிலத்தின் மக்கள் இயக்கம் எனக், கூறிக் கொள்ளுதல் முடி யாது.

★ ★ ★

எமது அரசியல் வரலாற்றினதும், சிந்தனைப் போக்கினதும் அடிப்படைத் தவறுகளுக்கு மூலகாரணமாக அமைவது, எமது 'யாழ்ப்பாண நோக்கு.'

இந்தப் படுமோசமான, அகநிலை நோக்கினால் (Subjective Out-Look) நாம் நமது பிரதேசங்களைப் பற்றியும், அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பற்றிம் பல தவறான கருத்துக்களுக்கு, ஆளாகி யிருக்கிறோம். நமது போராட்டங்களும் இயக்கங்களும் யாழ்ப்பா



படிப்பகம்

www.padippakam.com

ணத்துக் குட்டிபூர்ஷுவா வட்டங்களையும், இளைஞர் மட்டங்களையும் உடைத்துக்கொண்டு பரந்துபடுவதற்குத் தடையாக அமைவதும், இந்த யாழ்ப்பாண நோக்கேயாகும். அடிப்படையில் தவறான இத்தகைய கருத்துக்கள், தவறான அரசியல் கையாளுகைகளுக்கும், தோல்விகளுக்குமே வழி வகுக்கும்.

கிழக்கு மாகாணம் இலங்கைத் தமிழர்களது மாகாணம் என்ற எமது கருத்தும், இத்தகைய 'யாழ்ப்பாண நோக்கில்' எழுந்த கருத்தே. உண்மை அதுவல்ல: கிழக்கு மாகாணம், இலங்கைத் தமிழ் பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசம் என்பதே, உண்மையாகும்.

திட்டமிட்ட அடிப்படையிலான சிங்களக் குடியேற்றம், சிங்கள மீனவர்களின் பருவகாலக் குடிவரவுகளைத் திட்டமிட்ட அடிப்படையில் நிரந்தரமாக்குதலும் விரிவாக்குதலும் போன்ற நடவடிக்கைகளால்; (இந்த மீன்பிடியாளர்களிற் பலர் காலப்போக்கில் சிங்களமயமாகிய, பரவர் போன்ற தென் இந்திய மீன்பிடிச் சாதிகளைச் சேர்ந்த தமிழர்களாவர்.) நமது பாரம்பரியப் பிரதேசமான கிழக்கு மாகாணம், நாளுக்குநாள் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இத்தகைய அவசரச் சூழலிலாவது நாம் கிழக்கு மாகாணத்தின் நிதர்சனத்தை உணர்ந்து, அதன் அடிப்படையில் சிந்திக்கவும் அரசியல் நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தவும் வேண்டுவது, அவசியமாகும்.

இத்தகைய தமிழ்பேசும் மக்களின் ஐக்கியத்தால்-இத்தகைய ஐக்கியம் ஒன்றினுல் மட்டுமே, அடிப்படையில் கிழக்கு மாகாணம் பாதுகாக்கப்படும்.

★ ★ ★

கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை அமைப்பு 1981ம் ஆண்டின் புள்ளி விபரங்களின் அடிப்படையில், பின்வருமாறு அமைந்துள்ளது.

| இனப்பிரிவு | சனத்தொகை | வீதாசாரம் |
|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 399,406 | 40.90 |
| மலையகத் தமிழர் | 12,045 | 1.24 |
| முஸ்லிம் மக்கள் | 315,201 | 32 28 |
| சிங்களவர் | 243,358 | 24.92 |
| ஏனையோர் | 6,465 | 0.66 |



படிப்பகம்

www.padippakam.com

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மொத்தக் குடிசனத் தொகையில் 17 . 62 சதவீதத்தையும், கிழக்கு மாகாணத்தின் குடித் தொகையில் 32 . 28 சதவீதத்தையும் கொண்டுள்ள முஸ் லிம் மக்கள், கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் 41 . 6 சதவீத மக்களாக அமைந்து, முதன்மை பெறுகின்றனர். இம் மாவட்டத்தில் தமிழர்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 20 . 1 சதவீதம் மட்டுமே.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே சனத்தொகை அடர்த்தி, தமிழரது தனிப் பெரும்பாண்மை போன்ற விடயங்களிலாவது, யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் ஓர ளவு ஒப்பீட்டுத்தன்மை பெறுகின்றது.

## மாவட்ட அடிப்படையில்
## கிழக்கு மாகாணத்துக் குடிசன அமைப்பு (1981)

| இனப்பிரிவு | மட்டக்களப்பு | அம்பாறை | திருமலை | மொத். |
|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழர் | 234,348 | 78,315 | 86,743 | 399,406 |
| மலையகத் தமிழர் | 3,868 | 1,410 | 6,767 | 12,045 |
| முஸ்லிம்கள் | 79,317 | 161,481 | 74,403 | 3 15,201 |
| சிங்களவர் | 10,646 | 146,371 | 86,341 | 243,358 |
| பறங்கியர் | 2,300 | 643 | 1,211 | 4,154 |
| மலாயர் | 49 | 179 | 735 | 963 |
| ஏனையோர் | 371 | 387 | 590 | 1,348 |
| மொத்தம் | 330,899 | 388.786 | 256,790 | 976,475 |

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்து, ஆறுயிரத்து கும் சற்று அதிகமான மலையகத் தமிழர்களை வெளியேற்ற எடுக் கப்படும் முயற்சிகளில் அரசு வெற்றி பெறுமானால், மிக விரை வில் தமிழர்கள் என்ற அடிப்படையில் முதன்மை பெறுவது திரு கோணமலை மாவட்டத்தைப் பொறுத்துச் சாத்தியமற்றதாகி விடும்.



படிப்பகம்

www.padippakam.com

1981ம் ஆண்டின் புள்ளிவிபரங்களை ஆராயும் ஒருவர், இனரீதியில் 402 தலைகளில் மட்டுமே திருகோணமலையில் இலங்கைத் தமிழர்களின் முதன்மையின் தலை இன்னமும் தப்பியுள்ளது என்பதைக், கண்டுகொள்வர்.

சமய ரீதியில் ஏற்கனவே பௌத்தம் முதன்மை பெறும் மாவட்டங்களில் ஒன்றாகத், திருகோணமலை மாற்றப்பட்டு விட்டது.

இத்தகைய விஞ்ஞானபூர்வமான பார்வையைப் பெறும் தமிழ் பேசும் மக்கள் தலைமை எதுவும் காலாவதியாகிப் போய் விட்ட அகநிலை நோக்கான யாழ்ப்பாண நோக்கு அடிப்படையில், (அல்லது சற்று விரிவான இலங்கைத் தமிழர் நோக்கின் அடிப்படையில்) விடயங்களைப் புரிந்துகொள்ளுவதிலும், திட்டமிடுவதிலும், அரசியற்படுத்துவதிலும், நிகழ்ந்துவரும் தவறுகளையும அதனால்வரும் ஆபத்துகளையும் புரிந்து கொள்ளுவர்.

தமிழ்ப் பிரதேசங்களை, முக்கியமாகக் கிழக்கு மாகாணத்தையும், புத்தளம் மாவட்டத்தின் வடக்குக் கரையோரங்களையும் பாதுகாத்துக் கொள்வது தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தைக் (தமிழ்பேசும் மக்களது ஐக்கியத்தை) கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பங்குபற்றுதல் இன்றித் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணிஈடுபடுவது, வேடிக்கையானதாகும்

## தமிழ்பேசும் மக்களின் எதிர்காலமும் முஸ்லிம் மக்களும்

இத்தகையதோர் அரசியல், சமூக நிலைமைகளில் முஸ்லிம் மக்கள் புதியதொரு வரலாற்றுக் கட்டத்தில் நுழைவது, தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் தொடர்பாக, மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

சாதாரண முஸ்லிம் மக்களது மட்டத்துக்குக் கல்வி வாய்ப்புகள் பரவலாகி வருவதாலும், வருமானப் பங்கீடு தொடர்பான மாற்றங்களாலும் அவர்கள் மத்தியில் பலமாக நிலவிவந்த வர்க்க அமைப்புகள் முதன்முறையாக குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந் நிலைமை கொழும்புக்கு வெளியே முஸ்லிம் பிரதேசங்களில் மத்தியதர வர்க்கத்தின் வளர்ச்சி துலாம்



படிப்பகம்

www.padippakam.com

பரமாகப் பரவலாகி வருவதற்கும், கற்றறிந்த இளைஞர் குழுக்கள் தோன்றுவதற்கும் வகை செய்துள்ளன. கொழும்பு போன்ற நகர்கள் சார்ந்து சிறிய அளவில், ஆலைத் தொழிலாளர்களும் முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 'போடி' நிலக்கிழார் அமைப்பின் கீழ் நசுங்குண்டு வாரக் குடிகளாகப் பிணைக்கப்பட்டிருந்த பலரும், சிறு விவசாயிகளாகவோ அல்லது விவசாயக் கூலிகளாகவோ புதிய தோற்றம் பெற்றுள்ளதும், அவர்கள் மத்தியில் இருந்து சிறு முதலாளிகளும், கற்றறிந்த வாலிபர் கூட்டங்களும் தோற்றம் பெற்று வருவதும், புதிய நிலைமைகளைப் பலப்படுத்துவதுடன் எதிர்கால முஸ்லிம் மக்களின் அரசியலின் இயங்கியற் போக்கை நிர்ணயிப்பதாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக ஒரு சில முஸ்லிம் தனவந்தர்களோ, அல்லது குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து நிலக்கிழார்களான ஒரு சில முஸ்லிம் 'போடியார்'களோ கட்டுப்படுத்தி வந்த முஸ்லிம் மக்களது அரசியல், இறுதியாக அவர்களது கிழடுதட்டிய கைககளின் பிடிகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டுவிட்டது.

பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த முஸ்லிம் தனவந்தர்களையும், போடிமார்களையும் கையுள் போட்டுக் கொண்டு கையாலாகாத அரசியல் நடத்திய கொழும்பு முஸ்லிம் தலைமைகள், இன்று செயலிழந்து தவிக்கின்றன.

எழுபதுகளில் இலங்கைத் தமிழர்களது அரசியலின் பிரதான போக்காக அமைந்த எழுச்சிச் சூழல், வேறு ஒரு வடிவத்தில் முஸ்லிம் அரசியலிலும், தோற்றம் பெறுவதை இனங்கண்டு கொள்பவர்கள், இரண்டு போக்குகளையும் இணைத்து, தமிழ் பேசும் மக்க்ளது எதிர்காலத்தை இனங்கண்டு கொள்வர்.

கொழும்புத் தலைமைகளின் தொடர்ச்சியான ஆதரவைப் பெற்றுவந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சிங்கள, பௌத்த தேசியவாதக் கட்சிகளின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளால் குரலற்றுப் பாதிக்கப்பட்டு வந்தவர்களின் இளைய தலைமுறையினர், இன்று குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

யூ. எல். எம். ஜெயினுதீன் என்ற யாழ். பல்கலைக்கழக மாணவன் தனது கட்டுரை ஒன்றில் ''வேகந்தை சம்பவத்தின்



படிப்பகம்

www.padippakam.com

போது பொலிஸ் பகுதியினரால் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதுடன், பள்ளிவாசலும் சேதப்படுத்தப்பட்டது. ஆளும் கட்சியின் ஓரிரு முஸ்லிம் அரசியல் பிரமுகர்களினால் இவ்வுண்மை இருட்டடிப்பு செய்யப்பட்டு, இது பற்றிய விசாரணை கூட புதைக்கப்பட்டு விட்டது. சமீபத்தில் (1982ல்) காலியில் ஏற்பட்ட (சிங்கள—முஸ்லிம்) இனக்கலவரத்தின் போதும் வாய்திறக்க அஞ்சியிருந்த ஆளும் கட்சியின் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் (திரு அமிர்தலிங்கம்) குரல் எழுப்பிய பின்புதான், இது பற்றிக் கேட்கத் துணிவு பிறந்தது'' எனக் குறிப்பிட்டு கோபப்படும்—சூழ்முட்டையாகிவரும் கொழும்பு முஸ்லிம் தனவந்தர்களின் நலன்களை அடைகாக்கும்—முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் கோழைத்தனத்தால் ஏமாற்றப்பட்டு வந்தவர்களது இளையதலைமுறையினர், கிராமங்கள் நகரங்கள் தோறும் எழுச்சி பெறுவதுடன், புதிய தலைமைக்காகக் குரல் கொடுக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மத்தியில், தமிழர் நோக்கில் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்குச் சேவை செய்தபோதும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து, கல்வியையும், உயர்கல்வி வாய்ப்புகளையும் அதிகரித்துப் பரவலாக்கியதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, முன்னைநாள் கல்வி அமைச்சர் 'அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதின் புறநடையான பங்களிப்பால் இன்று, இம் மக்கள் மட்டத்திலிருந்து கற்றறிந்த, போர்க்குணம்மிக்க இளைஞர் கூட்டத்தினர் மேலெழுந்து வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்களது ஐக்கியத்துக்கும், பிரதேசப் பாதுகாப்புக்குமான பலமான அத்திவாரங்களை 1950களில் தேடியவர்கள், அவற்றைக் கண்டடையவில்லை; 1980களில் தேடுபவர்கள், அவற்றைக் கண்டடைவார்களா?

1970களில் இடம்பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் முஸ்லிம் விரோதப் பயங்கரவாதத்துக்கு உதாரணமாக, 1976 ஐப்பசி 2ல் புத்தளம் பள்ளிவாசலும் முஸ்லிம் வட்டாரங்களும் அரச பயங்கரவாதிகளாலும், சிங்கள பௌத்தக் காடையர்களாலும் தாக்கப்பட்டதையும் ஆறு முஸ்லிம்கள் கேட்டுக்கேள்வியின்றிப் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும், இங்கு குறிப்பிடலாம். 1977ன் பின் அரசுகட்டில் ஏறிய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பயங்கரவாதத்துக்கு, 1982ல் இராணுவத்தினாலும், பொலிசாரினாலும், சிங்கள பௌத்த காடையர்களாலும் காலி நகரின் முஸ்லிம் வட்டாரங்களும், அயலிலுள்ள பன்னிரண்டிற்கும் அதிகமான கிராமங்களும் தாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டமையை—ஒருவர் கொலையுண்டது உட்பட, நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்தைக்—குறிப்பிடலாம். இச் சம்பவங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மூடிமறைக்கக் கொழும்பு முஸ்லிம் தலைமைகளின் உதவியை சிறீ. ல. சு. க., ஐ. தே. கட்சிகளின் அரசுகள் பயன்படுத்தின.

இத்தகைய சம்பவங்களினால் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளின் தேசிய, முற்போக்கு முகமூடிகளை இனங்கண்டு கொண்ட முஸ்லிம் மக்களின் அபிலாசைகளும், போராட்டங்களும் முஸ்லிம் மக்களின் சிக்கல்மிக்க சமூக, புவியியற் பிளவுகளையும் மீறி, தமிழ் மக்களது போராட்டத் திசைகளைப் பெற்று வருகின்றன.

இன ஒடுக்குதல்களுக்கெதிராகத் தமது சமூக ஆளுமையையும் தனித்துவத்தையும் பேணும் பிடிவாதமும் போர்க்குணமும், முஸ்லிம் மக்களிடை அதிகரித்து வருகின்றது. இஸ்லாம் சமயத்துக்கு மட்டுமே அடுத்த நிலையில் தமிழ் மொழியை, தமது தனித்துவத்தின் சின்னமாகக் கருதும் போக்கும், பிடிவாதமும் முஸ்லிம் மக்களிடை முதன்மை பெற்றுவருகிறது. நிலைமையைப் புரிந்துகொள்வதற்கு, தமிழர்களைப் போலன்றி முஸ்லிம்கள் இன வெறி மிகுந்த சிங்கள பௌத்த சூழலில் தமிழை ஓங்கி ஒலிக்கிறார்கள் என்பதைக், கருத்தில் கொள்ளுதல் இங்கு அவசியமாகும்.

தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் இன்றைய எழுச் சிக்குமிடையில் பின்வரும் பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன.

(1) சிங்கள பௌத்த பேரினவாதத்துக்குத் தலைபணிய மறுக்கும் போக்கு

(2) என்ன விலைகொடுத்தும் தமது பாரம்பரியப் பிரதேசங்களையும், கிராமங்களையும் பாதுகாக்கும் போர்குணம்

(3) கொழும்பு சார்ந்த மேலோர் குழுத் தலைமையைத் தூக்கி எறியும் விழிப்புணர்வும், முற்போக்கும்

(4) தமிழ் மொழி மீது ஆர்வம்

இத்தகைய பொதுப் போக்குகளை அமைப்பு ரீதியாக இணைக்கும் ஐக்கிய முன்னணி முயற்சிகளே, மக்கள் மத்தியில் வேலை



படிப்பகம்

www.padippakam.com

செய்தல் என்ற பிரச்சினையின் ஆரம்பக் கவடாகவும், அடிப்படைத் திசையாகவும் அமைதல் கூடும். இதுவே, யாழ்ப்பாணக் கிடுகு வேலிச் சிறைகளைத் தகர்த்துக் கொண்டு தமிழ் மக்களது அரசியலும் போராட்டமும், தமிழ் பேசும் மாநிலமெங்கும் மக்கள் இயக்கமாகப் பரிணமிப்பதற்கு, அடிப்படை நிபந்தனையாகவும் அமையும்.

தமிழ் பேசும் மக்களது கடந்தகால அரசியல் வரலாறு கற்பிப்பது இதுதான்: தமிழ் பேசும் மாநில மட்டத்தில் அவர்கள் ஒன்றிணைவதன் மூலம் மட்டுமே, சிங்கள மாநில மட்டத்தில் ஒன்றிணையவுள்ள தமிழ்பேசும் மக்களது—முஸ்லிம், மலையகத் தமிழர்களினது எதிர்கால விடுதலையையும் பாதுகாப்பையும் திட்டமிடுதலும், திட்டமிட்ட அடிப்படையில் உறுதிப்படுத்துதலும் சாத்தியமாகும்.

இத்தகைய அமைப்பு ரீதியான வளர்ச்சியே, சிங்கள மாநிலம் சார்ந்த அவர்களது பிரச்சினைகளின் சிக்கல்கள், எவ்வண்ணம் விடுவிக்கப்படலாம் என்பதற்கு இருக்கக் கூடிய பல்வேறு தீர்வுகளை விஞ்ஞானபூர்வமாக வகுத்துக் கொள்ளவும், முற்போக்கான அரசியல் விவேகத்துடன் அவற்றுள் பெருத்தமான தீர்வை, அல்லது தீர்வுகளைத் தெரிந்து கொள்ளவும் வழி வகுக்கும்.

எப்படிப் பார்த்தாலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்து, தமிழ் பேசும் மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களும், ஏனைய தமிழர்களும் தேசியஇனத் தன்மையையும், சிங்கள மாநிலத்தில் வாழும் முஸ்லிம்களும், ஏனைய தமிழர்களும் தேசிய சிறுபான்மை இனத்தன்மையையும் கொண்டுள்ளனர் என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்வது, அவசியமாகும்.

இக்காரணத்தால் மிக உயர்ந்தப்பட்ச அமைப்பு ரீதியான வளர்ச்சியையும், வல்லமையையும் முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் மாநிலத்தில் மட்டுமே பெறுதல் கூடும். இது தமிழ் பேசும் மக்களது ஒருமித்த போராட்டமாக அமையும் போது, முஸ்லிம் மக்களது பலம் ஒரு நாட்டினத்தின் பலமாக சர்வதேச ரீதியாகவும், தமிழ் நாட்டிலும் பக்கபலம் பெற்றதாக அமையும். இப் போராட்டம் இன ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டம் என்ற வகையில் — ஒடுக்குதலுக்கு எதிரான முற்போக்கான அம்சங்களை, இயல்பாகவே பெற்றுள்ளது. இந்த முற்போக்கான அம்சங்கள் முதன்மை பெறும்போது இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் மட்டுமல்ல, தமிழ் நாட்டு முஸ்லிம்கள், தமிழ்நாடு, இந்தியா, அராபியநாடுகள் என



படிப்பகம்

www.padippakam.com

அனைத்து உலகமும் இலங்கை முஸ்லிம் மக்கள் சார்பில் நிற்பதை, அவர்கள் காணுவார்கள். இதன் மூலம் மட்டுமே சிங்கள மாநிலத்தில் சிதறி வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களின் சிக்கலான பிரச்சினைகளுக்கும் நீண்ட காலத் தீர்வைத் திட்டமிடுதலும், மக்கள் அமைப்புகளை அதனடிப்படையில் நெறிப்படுத்தித் தீர்வுகளை அடைதலும், சாத்தியமாகும்.

> "ஒரு சமூகம் தன்னைத்தானே சீர்திருத்திக்
> கொள்ளாதவரை, அல்லாஹ் அச்
> சமூகத்தைச் சீர்திருத்த மாட்டான்"
>
> (அல்குர் ஆன் 13:11)

ஓங்குக தமிழ்பேசும் மக்களின் ஐக்கியம்!

ஓங்குக உலக மக்களின் எழுச்சி!

P'RAYA
87 RUE DE COLOMBE…
92600 ASNIE… …
-SEINE ; F…

படிப்பகம்

www.padippakam.com

பிழைதிருத்தம்

☆ 2ம் பக்கம் 2வது அட்டவணையில் போரு, மேமன் முதலிய ஏனைய முஸ்லிம்கள் தொகை 34,195 என்பதற்குப் பதில் **34,206** என்று திருத்திக் கொள்ளவும்.

★★ 15ம் பக்கம் 3வது பந்தியில் 1880களில் என்பதற்குப் பதில் **1900**களின் முதல் தசாப்தத்தில் என்று திருத்திக் கொள்ளவும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

''கைகளிலும் விலங்கு,
கால்களிலும் விலங்கு:
சிந்தனை சிறைப்பட்டு
வாய்களிலும் பூட்டு!

அந்நிய நுகத் தடியின்
அடிமைச் சுமையழுத்த
நசுங்கி இனிக் கிடக்கும்
நாட்கள் ஒரு சிலதான்''

— ஃபைஸ் அஹமத் ஃபைஸ்

படிப்பகம்

www.padippakam.com

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE FRANCE

படிப்பகம்

www.padippakam.com

''கைகளிலும் விலங்கு,
கால்களிலும் விலங்கு:
சிந்தனை சிறைப்பட்டு
வாய்களிலும் பூட்டு!

அந்நிய நுகத் தடியின்
அடிமைச் சுமையழுத்த
நசுங்கி இனிக் கிடக்கும்
நாட்கள் ஒரு சிலதான்''

— ஃபைஸ் அஹமத் ஃபைஸ்

படிப்பகம்